ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# முப்பத்தோராம் நாள் நினைவு மலர்



## அமரர். துரோணாச்சாரி நடராசசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

பாண்டிருப்பு-02, கல்முனை.

25-05-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!



அன்னமலையைப் பிறப்பிடமாகவும்
பாண்டிருப்பு-02Bஐ வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.**

# துரோணாச்சாரி நடராசசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)
அவர்களின்

## 31ம் நாள்

# நினைவு மலர்

25-05-2015

பிரதியாக்கம்: **வேலு. தாஸ்கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!



புவி மடியில்: 1943 - 11 - 19

இறையடியில்: 2015 - 04 - 25

**திதிவெண்பா**

நல் ஆசானாய் நலம் செழிக்கும் நற்பண்பின்
சுடர் உருவாய் கோமகனாய்
துரோணாச்சாரி பெருமகனின் ஒரே மகனாய்
நற்பிறப்பாம் நடராசசிங்கம் எனும் நல்லோனம்
சப்தமியின் பூர்வபட்ச சனிக்கிழமை
சித்திரை மதி இருபத்தைந்து குறி தினத்தில்
இறைவன் பதம் இணைந்னரே
இவ்வுலக இறுதி கொண்டு!

# அமரர். துரோணாச்சாரி நடராசசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக!

## காணிக்கை

விழி அரும்பி மெய் தளிர்த்து – இவ்
உலகிற்கு தடம் பதிக்க வழி சமைத்த
அன்னைக்கோர் முதல் காணிக்கை

## பரம்பொருட்கு சமர்ப்பணங்கள்

தேன் கனிவின் கருவறையாய்
குழை மொழியின் கொற்றவனாய்
நீதி கொஞ்சும் நேர்மகனாய்
பாசத்தமிழ் பாவலனாய்
பக்குவத்தின் பொக்கிசமாய்
கொடுஞ்சொற்கோர் – எதிர்பதமாய்
பண்பதனின் புத்தகமாய்
வையத்து வாழ்விற்கோர்
அகராதி ஆகிவிட்ட – அமரர்

எங்கள்

## துரோணாச்சாரி நடராசசிங்கம்

*(ஓய்வு பெற்ற அதிபர்)*

அவர்கள் ஆன்மா இப்பூவுலக
பெருவாழ்வின் பலன் பெற்று வைகுந்தம்

**சொர்க்கமெனும் வதிவிடத்தில் வளம்பெற்று**
**குருபரனின் திருவடியில் இடம்பிடித்து**
**எல்லா நலம் ஒரு சேர அருள் வேண்டி**
**இறைஞ்சுகின்றோம் ஈசனவன் திருப்பாதம்**
**இறையே போற்றி.**

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், உற்றார், உறவினர்கள்,**
**பேரப்பிள்ளைகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புருஷன் என்று எனக்கமைந்த பேரரசு

"அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

ஒருவன் இல்வாழ்க்கையை தன் மனைவி மேல் செய்யத்தகும் அன்பையும், பிறர்க்கு பகிர்ந்து உண்ணுதல் ஆகிய அறத்தையும் உடையதாயின் அது இல்வாழ்க்கைக்கு உரிய பயனும் பண்பும் ஆகும்.

என் ஐயனே, என் அருமை உயிரே பெயரே, புகழே, பெரும் கருணை பொக்கிஷமே, இறைவனடி போய் சேர்ந்து இன்று முப்பத்தியொரு தினங்கள் நம்பிக்கொள்ள முடியவில்லை. நாட்கள் எல்லாம் நரகங்கள் ஆகின்றன. ஆறவில்லை காயம் ஆற்றுதற்கோ யாரும் இல்லை. கரம் பிடித்த காலம் முதல் கடந்து விட்ட சம்பவங்கள் அலை அலையாய் என் உள்ளத்தின் உள்ளே, அதை மீட்டி சில வரிகள் வரைகின்றேன்.

உயிரின் உயிரே, உத்தமரே உரைக்கின்றேன். உங்கள் புகழ். எனக்கு அப்போது வயது பதினாறு. என்னை கண்டதுமே காதல் கொண்டீர்கள். ஆண்டவனும், அனுசரித்தான், அனுமதித்தான். வெட்கமதை வென்றோம் நாமே. 1966 ஜனவரியில் கரம் பற்றினீர்கள். பெரியோர் பலர் கூடி இல்வாழ்வில் இனிமை சேர்க்க இசைந்தனர். நீங்கள் என்னை கரம் பிடித்த காலம் முதல் கவலை என்ற சொல்லுக்கு கருத்து எனக்கு விளங்கவில்லை. மட்/ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி முடித்து பின்னர் ஆசிரியராக முதற்பணிக்கு பண்டாரவளை சென் மெதடிஸ்த கலவன் பாடசாலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியவில்லை. தசை துடிக்கத் தவித்தீர்கள். என்னைப் பிரிந்து செல்ல மனமின்றி காட்டிய வேதனை இன்னும் என் மனதுள்ளே பசுமையாக...! பின் இறுதி முடிவெடுத்தீர். உன்னையும் தான் அழைத்துச் செல்வேன் என்றுரைத்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவன்றோ இன்பம் என தலை அசைத்தேன் ஆம் என்றேன். இல்லறத்தின் சிட்டாக சிறகடித்து பறந்த கதை நினைக்க வலியெடுக்கிறது. ஏழு வருடங்கள் பண்டாரவளை எங்களுக்கு பரிச்சயங்கள் பல தந்து குளிர்வித்தது. ஊரைவிட்டு போகாத எனக்கு உலகத்தை பார்ப்பது போன்ற பிரமை கொண்டேன். களிப்புற்றேன். நினைக்க இதயம் கனக்கிறது. தசை குறுகி வலி எடுக்கிறது ஐயா. என்ன செய்வேன். பசுமைகளை மீட்ட என்னால் முடியவில்லை. பண்டாரவளை முடித்து வந்தோம். ஐயனே தங்களின் பணியை அதனோடு சேர்ந்த பெருமையை நண்பர்களை, பெரியோரை மாற்று மொழியாளர்களை, மாற்று மதம் கொண்டோரை, வல்லோரை எல்லாம் போற்றும் திறன் கண்டு வியந்து நின்றேன் ஐயா!

உள்ளுக்குள் பூரிப்பேன், உவகை கொள்வேன், ஆளுமையின் அத்திவாரம் அன்றோ நீங்கள். அதிசயித்தேன். அன்புள்ளம் கொண்டவரே என்றென்றும் கண்கண்ட தெய்வம் நீங்கள். போற்றுகின்றோம். பசித்திருந்தால் பதறிடுவீர். நான் தனித்திருந்தால் தவித்திடுவீர். பண்பான பாலகர்கள் ஆறைப் பெற்றீர். பகல் இரவு பாராமல் பாரம் ஏற்றீர். இன்னும் நான் வியக்கின்றேன், சுறுசுறுப்பை! இணையில்லா கோமகனே வாழ்க்கை வண்டி ஓடுவதற்கு ஒற்றைச் சில்லு உதவுமா? அதிபராக மாணவர்க்கெல்லாம் கல்வி தந்தீர்கள். தந்தையாக போற்றுவோர்க்கு அன்பைத் தந்தீர் பேருதவி புரிவதிலே பெருமை கொள்வீர்கள். பூசல்கள் குடும்பத்துள் புகுந்து விட்டால் தீர்த்து வைக்கும் லாவகம் தங்களால் மட்டுமே முடியும் கலை. உங்கள் தயவினிலே கல்வித்தகமை பெற்றோர் எத்தனை பேர்? ஆக்கிவிட்ட ஆசான்கள் எத்தனைபேர்? இப்போதும் பகிரும் துக்கம் தாங்கவில்லை. அழகாக உடுத்திடுவீர். நடையழகு கண்ணுக்குள் நிழலாடுகிறதே! ஊருக்குள் உடன்பாடு காட்டும் வேகம் தான் என்ன? சாகித்தியத்தார் சந்திப்பில் தவறவில்லை நீங்கள். அரசியலை அலசுவதில் என்ன திறன், மேலும் ஆன்மீகம் இறைவணக்கம் எதிலும் முதலாய் இறைபணிகள் செய்து வந்தீர்? உத்தமரே! ஓய்வு பெற்ற காலம் முதல் வீட்டிலே ஓய்வும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு என்னவென்றே தெரியாத அண்ணலே உன்னை ஓய்வு பெற வைத்தது யாரய்யா? காரியங்கள் கச்சிதமாய் செய்து முடிக்கும் காட்சி கண்டு நான் உள்ளுக்குள் பெருமை கொண்ட காலங்கள் ஏராளம். நான் நோய்வாய்ப்பட்டால் பதறிடுவீர்கள். தனக்கே வந்த நோய் போல் உழல்வீர்கள். இதைப் பார்க்க முடியாமலே என் நோய் பறக்கும் மெல்ல. கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தீர் ஐயா. காலனவன் முகவரி மாறி வந்தானோ தெரியவில்லை. குழந்தைகளுக்கு ஒரு இடர் என்றால் கொதித்திடுவீர். குடும்பத்தார், சகோதரங்கள் என்றால் உயிர் உருகும். தெய்வத்தை உங்கள் வடிவில் தான் நான் பார்த்தேன் ஐயா. ஓய்வூதியர் சங்கம் நீங்கள் இணைந்த பின்னர்தான் பெரு விருட்சம் ஆனது என்பார்கள். உங்கள் புகழ் அயலார் சொல்லும் போதெல்லாம் ஆனந்தக் கண்ணீர் சொரிவேன். உவகை கொள்வேன். மேலும் முதியோர் சங்கத் தலைமை ஏற்று நடத்தினீர்கள். பெரியோர் எல்லாம் உங்கள் திறமை போற்றினர். ஐயாவை கண்டு கொள்ள என அயலவர்கள் வரும் போதெல்லாம் உங்களுக்கு மனைவியானதன் பாக்கியத்தின் பெறுமதியை நன்குணர்ந்தேன். குலக் கொழுந்தே உங்கள் பணி இவ்வுலகில் நிறையவில்லை. இருப்பினும் இறைவனுக்கு உமைப்போன்ற நிர்வாகி தேவை என்று காலனவனை தூது விட்டான். காலன் அவன் கணக்கு கெட்டு முகவரி விட்டு உன்னை கவர்ந்து விட்டான் போலும், ஐயனே என் உயிரை உங்களுடன் எடுத்துக் கொண்டீர். உடல் மட்டும் ஊசலாட்டம் போடுது இங்கே. தகிக்கிறது உடல் தளர்கிறது. நொந்து துவள்கிறது தேகம். காலனவன் கபடத்தனம் யார் அறிவார்? கூட்டிச் செல்வார் என யார் நினைத்தார்? இன்றுடனோ முப்பத்தியொரு நாட்கள் முடிந்தாலும் முடியாது. மூயுகங்கள் மறக்க உன்னை முதல்வோனே முன்னே வந்துன் முகத்தைக் காட்டு!

*பிரிவால் துவண்டு அழும்*

**பிரிய மனைவி தனலெட்சுமி நடராசசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமு/ கணேசா மகா வித்தியாலயம் - சேனைக்குடியிருப்பு
பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன்... 1998 இல்



தனது மூத்த புதல்வி குமுதா திருமணத்தின் போது
குடும்ப சகிதம் ... 03-09-1998 இல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பா

அன்பு உங்கள் அடிப்படைச் சொத்து
எளிமை என்பதன் இலக்கணம் நீங்கள்
சூரியன் ஆதிக்கம் கொண்ட நீங்கள்
எவரையும் இலகுவில் கவர்ந்திடுவீர்கள்

சாதி, மதம் என்ற பேதம் அறியீர்
இருப்பவர், இலார் என்று ஏற்க மறுத்தீர்
நீதி, சமத்துவம் என்பதை தரணியில் உயர்த்தி
தாரகமாய் அதை நடத்தையில் வைத்தீர்

அளவுக்கு மீறிய ஆசையை வெறுத்தீர்
அமைதியாய் உங்கள் இல்வாழ்க்கையை தொடர்ந்தீர்
பகைமையை முற்றாய் மனதில் விலக்கி
எம்முடனும் பலருடனும் பாசமாய் (50 வருடம்) பழகியே வாழ்ந்தீர்

அதிபர் சேவையில் முப்பத்தேழு ஆண்டுகள்
ஓய்வு எடுத்தும் ஓய்ந்திருக்காது
கல்முனைப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர்களின்
நம்பிக்கை நிதியத்தின் செயலாளராகவும் ஊரிலே
முதியோர் தோழமை சேர்த்து முதியோர் சங்கத்தின் தலைவரானீர்.

நோயற்ற வாழ்வினை அறிந்திரமாட்டீர்
நொடியில் வந்தநோய் உங்களை தாக்க
அன்பான மனைவி, மக்கள், மருமக்கள் பேத்திமார்
பேரன்களும் சூழ அமைதியாய் பிரிந்ததே உங்களின் உயிர்

இம்மண்ணிலே கடமைகள் சீராய் முடித்து
விண் நோக்கியே சென்று விட்டீரே
எங்கு நீர் சென்றாலும் அமைதியாய் துயில்
இறைவனை பணிந்து நாம் பிரார்த்திக்கின்றோம்.

*அன்புடன் மகள்:*
**குமுதா தாஸ்கரன்**
முகாமைத்துவ உதவியாளர்
மாநகரசபை, கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விருப்பம்,

நாங்கள், காலஞ்சென்ற. துரோணாச்சாரி நடராஜசிங்கம் அவர்களின் குழந்தைகள்,

எங்கள் அன்பிற்குரிய தந்தை - நாங்கள் பூமியில் வாழ வழி வகுத்தவர். உங்களைப் பற்றி அதிகம் தெரியாது, வளர்ந்தவர்கள் சொல்ல கேட்டிருக்கிறோம், நீங்கள் விசித்திரமானவர் என்று. நாங்கள் மனம் வருந்திய போதேல்லாம், அதை விட்டுப் போகச் செய்தீர்கள்.

"சரி, உண்மையில் உங்களுக்குக் கேட்க முடிந்தால், நாம் விவாதிக்க ஏதோ இருக்கிறது, உள்ளே ஒரு விசித்திரமான வலியை உணர்கின்றோம். கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும். அது ஒரு மாதம் முன்பு தொடங்கப்பட்டது - எங்கள் தந்தை விட்டு சென்றார் என்பது.

நீங்கள் எங்களை மிக தொலைவிற்கு அழைத்து வந்தவர், நாங்கள், ஒரு மிக சிறப்பான இடத்தைப்பெற வேண்டும் என்று. அது ஒவ்வொரு நாளும் எமக்குக் கவலையை ஏற்படுத்தும். --- நாங்கள்,

எமது தந்தையின் அழகான முகம் பார்க்க வேண்டும். உங்கள் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாது, ஆனால் எங்களுக்கு தெரியும் எங்கள் தந்தை போய்விட்டடார் என்று பொருள் இருக்கிறது,

சரி, நாம் ஒரு ஆழமான மூச்சு வாங்கினால்--, நாங்கள் கடவுளிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும், 'நாம் உங்களை தவறாக புரிந்து கொள்ளவில்லை' என்றும், எங்களை மீண்டும் எங்கள் தகப்பனிடமே கொடுக்க வேண்டும் என்றும், நீங்கள் எங்கள் தந்தையை பார்க்க அனுமதிக்க வேண்டும் என்றும்'.

நாம் எப்போதும் நன்றாக இருக்க வேண்டும், இது சத்தியம் கடவுளே-.

நாங்கள், அவரை மிகவும் இழக்கிறோம். தந்தையே நாம் தான், என்ன செய்ய வேண்டும் என்று எமக்குத் தெரியாது நீங்கள் உண்மையில் கேட்க முடியும் என்றால், நீங்கள் எமக்கு உதவ முடியும். எப்படி?

எங்கள் தந்தை இங்கே ஒரு நாள் இருக்க முடியுமா?,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, அவர்களது வாழ்க்கையில் என்ன? யார் அவர்களை ஏற்றுக் கொள்ள முடியும் என்று? எப்போதும் எங்களது தாயார் எண்ணினாரே,
எவ்வளவு தனிமையாக, இருப்பா????
நீங்கள் சொல்லவில்லை, நீங்கள் யாரையும் அவமதிக்கவும் இல்லை,
நாம் தான், மிகவும் காயப்பட்டிருக்கவேண்டும் என உணருகின்றோம்.
காரணம் நம் தந்தை போய் விட்டார்!
நாங்கள் உங்களிடம் பேச நினைக்கின்றோம், அது - எங்கள் தந்தை ஒரு அழகான இடத்தில், நல்ல மக்கள் சந்திக்கும் இடத்தில் இருக்கிறார் என்று மட்டுமே,
நாங்கள் அவரை மேலாக பார்க்கின்றோம் என்று சொல்ல எங்களுடன் நீங்கள் கடிகாரமுள் போல அருகே எப்போதும் இருக்க வேண்டும்?
"சரி, அதுதான் வழமை என்றால், எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கின்றோம், தந்தையே உங்களுக்காக நேரம் செலவிடுவோம், உங்களிடம் நாங்கள் இணையும் வரை. அது இன்னும் எமக்கு தெளிவாக இல்லை ஏனெனில், அவர் நல்ல முறையில் போய்விட்டார், என இப்போதும் உணருகின்றோம்.
நாம் தந்தைக்காகச் செய்ய வேண்டும் என ஒரு ஆசை இருக்கிறது அது, நாங்கள் உங்களுக்காகச் செய்யும் பிரார்த்தனைதான், நீங்கள் சொல்வது சரி, நாங்கள் உங்களுக்காகச் செய்யும் பிரார்த்தனைதான் தந்தைக்காகக் கொடுக்கும் மிகயுயர்ந்த இடம். இதுவே எமது வாழ்கையில் நீங்கள் மிக மிக உயர்ந்தவர் என்பதற்கு சிறந்த எடுத்துகாட்டாக அமையட்டும்.

கண்ணீருடன்,
குமுதா நடராஜசிங்கம்,
விஜயா நடராஜசிங்கம்,
குமணன் நடராஜசிங்கம்,
முகுந்தன் நடராஜசிங்கம்,
கிரிதரன் நடராஜசிங்கம்,
கிரிஜா நடராஜசிங்கம்.

************


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத்துயில் கொண்ட தெய்வமே!

இத்தனை ஆண்டுகள் இதயத்தில் எமைச் சுமந்து
உதயமாய் காத்து வந்த கடவுளே
எங்கள் இல்லத்தின் இருளகற்ற வந்த சூரியனே
இதயமோ இருட்டாகிப் போனதே இன்று
அப்பா, நீங்கள் எந்தவொரு சவாலையும் இலகுவாக
எதிர்கொண்டு கருமங்களை நிறைவேற்றுவதில்
வல்லவர் அல்லவா.

அப்பா என்று ஆசையோடு அழைத்த கடவுளே
அன்போடு எம்மை பாசத்துடன் அணைக்கும் ஐயனே
வாழ்க்கைப் பயணத்தில் அகல் விளக்கே
எம்மை உறங்க வைக்க, நீ விழித்திருந்தாய்
இன்று உங்கள் மெய் உறக்கம்,
எங்கள் உறக்கத்தை கலைத்ததுவே – அப்பா

சுகம் பெற்று வீடு திரும்புவாய் என்று
கலைந்த விழிகளுடன் காத்திருந்தோம் அப்பா
நீ இப்படி, கணப்பொழுதில் எம்மை விட்டுப்
பிரிவாய் என்று நினைக்கவில்லையே – உனது
பிள்ளைச் செல்வங்களை சோகத்தில் ஆழ்த்தியது ஏனோ?

உன் வெற்றுடல் கண்டு ஆறாது இந்த மனது
இனி அப்பா என்று யாரை அழைப்பது
இறைவனடி சேர்ந்திட்ட எனதருமை அப்பாவே
எந்தப் பிறப்பில் இனி – உன்
முகம் காண்போமோ!

*இளைய மகன்*
**ந. கிரிதரன்**
மருந்தாளர்
வேப்பையடி மருத்துவமனை, அன்னமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983-03-16இல் தனது மூத்தமகள் மஞ்சள் நீராட்டு விழாவின் போது
துணைவியார் தனலெட்சுமி சகிதம்




கமு/ சது/ நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் அதிபராக
இருந்தவேளையில் அன்னார் பெயரில் மண்டபம் அமைத்து கௌரவம் தந்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பு அப்பாவே!

என் அன்பு மிகுந்த அப்பாவே...
இன்று எம்மோடு நீங்கள் இல்லையே
நீங்கள் மறைந்து ஒருமாதம் சென்றாலும்
போகும் இடமெல்லாம் உங்கள் நினைவே
உங்கள் அன்பை நினைக்கையிலே உள்ளம்
பதறுகிறதே என் அப்பாவே!

உயிர் பிரியும் வலியை
உங்கள் பிரிவில்தான் உணர்ந்தேன்
காயம் ஆறும் வழியை
நான் நித்தம் தேடுகின்றேன்
நீங்கள் இல்லை என்பதை நம்பவே முடியவில்லை
நீங்கள் தேடித் தந்த வாழ்க்கைக்குக் கோடி
நன்றி என் அன்பு அப்பாவே...

அன்பையும் பண்பையும் கல்வியையும்
நல்லொழுக்கத்தையும் அள்ளிச் சொரிந்த
உங்களை என் உயிருள்ளவரை
மறக்கமாட்டேன்
அடுத்து ஒரு ஜென்மம் இருந்தாலும் மீண்டும்
உங்கள் பிள்ளையாய் பிறக்க வேண்டும் என வேண்டுகின்றேன்
என் அன்பு அப்பாவே...

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

*அன்புடன் குட்டி மகள், மருமகன்*
**கிரிஜா சிறிகந்தபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ச்சிக்கு உரம் தந்த உத்தமர்!

உயர்ச்சிக்கு உரம் தந்த உத்தமனே!
பணிவுக்கு பதங்கள் சொன்ன புத்தகமே!

தன்னடக்கம், நாவடக்கம், தயவு என்று
தர்மகுணம் காத்து நின்ற தவப் பிறப்பே!

சிறு மாணாக்கர் முதல் பெரியோர் காறும்
சீர் வாழ்வு விழுமியத்தைச் செப்பி நின்று
சிகரத்தில் சுடர் விட்ட அதிபன் ஆனாய்!

சமூகத்தின் சக வாழ்வில் சளைக்கா வண்ணம்
சகல தரம் கொண்டோர் மீதும் சமனாய் நின்றீர்!

நெறியாள்கை, நீதி, நேர்மை, நெகிழ்வுப் போக்கு
நிர்வாகம், நிறைந்த கலை பலவும் வென்றீர்!

பணம் படைத்தோர் பாமரர்கள் பேதம் இன்றி
பலருடனும் பழகும் விதம் வியந்து நின்றோம்!

குலவிளக்காய் குடும்பத்தில் குதூகலித்தீர் – சுற்றம்
போற்றும் பல சேவைகளை செய்து வந்தீர்!

தேவைகளை சேவை என கரத்தில் ஏற்று
கச்சிதமாய் நிறைவேற்றி மாட்சி கொண்டீர்!

கலக்கமின்றி கவலைகளை துடைத்தெறிந்து
காண்பவரை அதிர்ச்சியிலே ஆழ்த்தி நின்றீர்!

சிற்றெறும்பும் சிலவேளை உறங்குமென்பர்
உறக்கமில்லை உன்றனக்கு உழைப்பே நாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்பே உன் சிரசில் கிரீடம் ஏற்றும் - இதனை
சோம்பேறித்தனம் பார்த்து தோல்வி ஏற்கும்

ஆன்மீக அரும்பணிக்கும் அடிமை ஆனாய்
ஊரை அரவணைக்கும் உத்தியிலே உயர்வாய் நின்றாய்

கொடுஞ்சொற்கள், கடுங்கோப்பு கண்டதில்லை நாவில்
காலத்தின் தேவைக்கான கருத்து பகர்வீர் நீங்கள்!

தற்பெருமை சிறிதேனும் காண்கவில்லை நாங்கள் - ஐயா
தரத்தினிலே உயர்ந்தவர்க்கும் தாழ்ந்தவர்க்கும் தயவாய் நின்றீர்

குழந்தை, குட்டி, சோதரங்கள், சுற்றம் என்று
வாழ்வது ஓர் வசந்தம் என்ற வரைபு சொன்னீர்!

முற்பிறப்பில் நான் செய்த தவப்பயனோ ஐயா
யானும் உம் குடும்பத்துள் மூத்த (மரு) மகனாய் ஆனேன்

நீ எனக்கு மருமகனா? இல்லை என்பீர்!
அதிர்ச்சியின் பின் சுதாகரித்து நிற்கும் போது

என் குழந்தைகள் அனைவர்க்கும் மூத்தவன் நீ!
குடும்பத்தில் மூத்தவனாய் என் மகன் நீ என்றீர்!

தந்தைக்கு தந்தையே தாம் இட்ட கட்டளைக்கு
தலைவணங்கி செவிமடுப்பேன், உயிர் கொடுப்பேன் ஐயா!

சோதிடத்தில் சொன்ன ஒரு சொல்லை வைத்து
எழுபத்திரண்டின் பின் எனக்கு உலகம் இல்லை என்றீர்!

சோதிடத்தை ஒரு போதும் நம்பாதீர்கள் ஐயா!
சாத்திரமும் சில வேளை சமாதியாகிப் போகும் என்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் ஜாதகத்தின் இறுதிவரி - உண்மையென
உறவுக்கும், உலகுக்கும் உரைத்துச் சென்றீர்!

காலனுடன் களியாட்டம் இருபத்து மூன்று நாட்கள்
காலனவன் வென்றதினம் இருபத்தைந்து ஏப்ரல் திங்கள்

உங்கள் மறைவு எனும் அதிர்ச்சியிலே
உறைந்து விட்ட உதிரம் நாங்கள் - மேலும்

ஆற்றுதற்கு யாரும் இல்லை ஐயா - நாங்கள்
துயரில் மீட்சிபெற விளைகின்றோம் முடியவில்லை

சோகத்தில் ஆழ்ந்து விட்டோம் சொர்க்கத் தேவே
சொற்ப நொடி வந்தெம்மை தேற்றிச் செல்வீர்!

இன்றுடனோ முப்பத்தியோர் தினங்கள் - காலன்
கவர்ந்திட்ட காலங்கள் ரணமாய் தைக்கும்

இன்னும் முக்கோடி தினங்கள் தான் போகும்
மூவுலகும் திசைமாறி தடங்கள் தாவும்

எம் ஐயா உம் நினைவு எம் உயிரில் சேரும் - மேலும்
உதிக்கின்ற புது உறவில் உன் நினைவோடுவுதிரம் ஓடும்!

*நின் ஆத்மசாந்திக்காய்*
*வாஞ்சையுடன் இறைபதம் பற்றித்தொழும்*
தங்களின் மூத்த மருமகன்
**வேலு - தாஸ்கரன்**
**(மற்றும் குடும்பத்தினர்)**
067-2220613 / 077-6000328


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு ஒரு நோக்கு...

அம்பாறை மாவட்டம் அன்னமலை என்னும் அழகிய கிராமம் அன்னாரின் பிறப்பிடம். காலஞ்சென்ற துரோணாச்சாரி தங்கப்பிள்ளை தம்பதியர் தாம் அன்னாரின் அன்புப் பெற்றோர், அவதரித்த ஆண்டு 1943, 19ம் தினம் கார்த்திகைத் திங்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை கமு/நாவிதன்வெளி அன்னமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மேற்கொண்டு ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் தமது இடைநிலைக் கல்வியை காத்தான்குடி மத்திய கலலூரியில் மேற்கொண்டார். பின்னர் மட்/வந்தாறுமூலை அரசினர் மத்திய பாடசாலையில் O/L, A/L பயின்று சித்தியெய்தினார். நாளும் பொழுதும் கல்வியில் கடும் சமத்தாய் வந்து பெயர் கொள்ள துடித்தார். கல்வியை தனது கண்ணாய் போற்றி கற்றதனால் அன்னார் தனது 19ஆவது வயதினிலேயே ஆசிரியர் பணிக்கான முதல் நியமனத்தை 01-10-1962 இல் பெற்றார். முதல் ஆசிரியர் நியமனமே அதிஸ்டவசமாய் தான் ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட கல்/ நாவிதன்வெளிஅன்னமலை அரசினர் த.க.பாடசாலையிலேயே கிடைத்தது தனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதினார். ஒரு வருடத்தின் பின் 1964-1965 வாக்கில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பணியை செவ்வனே நிறைவு செய்து வந்தபோது இவருக்கு இல்லறத்தில் இணைந்துவிட இறையருளும் கூடியது. இளமை கனிவான சைகை காட்டியது. அன்னார் தனது 24வது வயதினிலே பாண்டிருப்பு (காலஞ்சென்ற) இரத்தினசிங்கம் மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரி தனலெட்சுமி எனும் தயவாளை 1966-01-31ம் திகதி இல்வாழ்க்கைத் துணைவியாக கரம் பற்றினார். மீண்டும் பயிற்றப்பட்ட ஆசிரியராக தரம் பெற்றபின் பண்டாரவளை சென்மேரிஸ் தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியராக மாற்றம் பெற்று சேவையில் இணைந்தார். இல்லறமும் நல்லறமாய் இனிதே அமைந்தது. இச்சைபோல இணைந்த சேவையும் இன்பமாக தொடர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பண்டாரவளை சேவை முடிய 01-02-1969 இலிருந்து 31-05-1969 வரை மகிழூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக பணியேற்றார். பின்னர் துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் பணி புரிந்த காலம் 01-06-69 இலிருந்து 31-01-1970 வரை. பின்னர் 01-02-1970 இல் இருந்து 31-01-1976 வரை பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் தன் ஆசிரியர் பணி தொடர்ந்தது. மேலும் 01-02-1976இல் இருந்து 18-02-1980 வரை மீண்டும் கமு/நாவிதன்வெளி அன்னமலை அ.த.க. பாடசாலைக்கு மாற்றலானார். அக்காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக திடீர் மாற்றங்கள் வேதனை தரும். இருந்தும் தொழில் நேர்மை கொண்ட உள்ளம் ஆதலால் இவற்றை எல்லாம் இலகுவாக ஏற்றுக்கொண்டார். மீண்டும் 20-02-1980 இலிருந்து 20-04-1982 வரை பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் பணி புரிந்து மீண்டும் பாண்டிருப்பிலேயே உள்ள நாவலர் வித்தியாலயத்தில் 21-04-1982 இல் இருந்து 25-01-1983 வரை பொறுமையோடு குருப்பணி தொடர்ந்தது. அன்னாரின் சேவைத்திறன் பாராட்டியோ என்னவோ தான் ஆரம்பத்தில் கல்வி கொண்ட கமு/ நாவிதன்வெளி அன்னமலை அ.த.க. பாடசாலைக்கு பதில் அதிபராக பணிக்கப்பட்ட வேளையில் அதிபர் தரம் இரண்டு பதவி உயர்வும் பெற்று 01-06-1989 முதல் 30-09-1994 வரை கடமையாற்றினார். இக்காலப் பகுதியிலேயே தான் தன் சொந்த ஊரின் கல்விக்கூடம் வளர்ச்சி பெற அருந்தொண்டாற்றினார். அன்னாரின் கடும் உழைப்பால் ஆரம்பப் பாடசாலையாய் இருந்த பள்ளிக்கூடம் G.C.E. O/L, A/L வரை பௌதீக தேவைகளையும் பூர்த்தி செய்து தரம் உயர்ந்து நின்றது. ஊரார் அதிசயித்தனர். சிறிதேனும் முயற்சி தளரவில்லை. அன்னாரின் கல்விக்கான அர்ப்பணிப்பு கண்டு அந்த காலப்பகுதிக்கான கிழக்கு மாகாண கல்விச் செயலாளர், சம்மாந்துறை வலய கல்விப்பணிப்பாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பாராட்டிக் கௌரவித்ததை காலத்தால் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர்பாடசாலை சமூகம் அன்னாரின் பெயரில் "நடராசசிங்கம் மண்டபம்" நிறுவி அழகு சேர்த்தது. மேலும் 30-09-1994 இல் இருந்து 23-03-1999 வரை கமு/ சேனைக்குடியிருப்பு கணேசா மஹா வித்தியாலயத்தின் அதிபராக பதவியேற்று பாடசாலை கல்வி, பௌதீக வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்தார். அதன் காரணமாக அன்றைய கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் திவகலாலா அவர்களினால் அதிர்ச்சிப் பாராட்டை பெற்ற போது புழகாங்கிதமடைந்த நிலை யாம் அறிவோம். இக்காலப்பகுதியில் இப்பாடசாலை சகல வளங்களாலும் மிளிர்ந்தது. ஊர் போற்றி வாழ்த்தின. கல்வியே நம் கண்கள் என்பார். நம் சமுதாயம் செழித்தோங்க கல்விதானே முதல் செல்வம் என்பார். சேவையுணர்வு கொண்ட செம்மல். கமு/ சேனைக்குடியிருப்பு கணேசாவில் சுமார் ஐந்து வருட சேவை முடித்து பின்னர் இறுதியாக கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் 24-03-1999 இலிருந்து 31-10-1999 வரை சிறிது காலம் உதவியதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றார். அன்னார் ஆறு பிள்ளைகட்கு தந்தையாவார். இதில் முதல் பெண்ணும் இரு ஆண் பிள்ளைகளும் அரச பணியாளராவர். தன் அனைத்து பிள்ளைகட்கும் தளராமல் கல்வியூட்டி ஒரு தந்தை செய் கடமைகளை செவ்வனே செய்து நின்றார். அருமை மருமக்கள் ஆறும் கொண்டார். அன்னாரின் பெயர் சொல்ல பத்து பேரப்பிள்ளைகளுக்கும் அன்புப் பாட்டன் ஆனார். நல்ல சகோதரங்களை கொண்டவர். உறவுகளைக் கொண்டவர், உற்றாரை மதித்தார், நல்லுணர்வுகளுக்கு இடம் கொடுத்தார். உயர்வு என்றால் என்னவென்று உரக்கச் சொல்வார். எவ்வேளையிலும் எதற்கும் பின்நிற்காத பெருந்தகை சமூக சேவையிலே சளைக்காத போராளி. அன்னார் ஓய்வு பெற்று விட்டார், இனி என்னுடனே ஓய்வாய் இருப்பார் என்று துணைவியார் கனவு கண்டார். மனதுள் அமைதி கொண்டார். அன்னார் ஓய்வு பெற்று வந்து துணைவி நினைத்தபடி வீட்டில் இருக்கவில்லை ஐயா. கல்முனையில் ஓய்வூதியர் நிதியம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. ஆரம்ப உறுப்பினர்கள் 178 பேர். அச்சங்கத்தில் உடன் சேர்ந்தார். அன்னாரின் நிருவாகத் திறன்கண்டு வியந்தனர். உறுப்பினர்கள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே இவரை செயலாளர் பதவிக்கு அமர்த்தினர். செயலாளரானார். உத்திகளை கையாண்டார். உறுப்பினர்கள் பெருகினர். இப்போது சங்கத்தின் உறுப்பினர்கள் 600 பேரை தாண்டி வீறுநடை போடுகிறது. நிதியத்தில் புதுப்புது அனுகூலங்களை அறிமுகம் செய்தார். முன் மொழிந்தார். சங்கம் ஏற்றுக்கொண்டது. இன்று அரசசார்பு நிறுவனமாய் அகலக் கால் விரித்து நிற்கிறது. ஊரிலும் இவர் சேவை உத்தமமானது. ஓய்வூதியரல்லாதோர் என்ன செய்வது? முதியோர் சங்கம் நிறுவப்பட்டது. அதன் தலைவர் ஆனார். முதியோர்கள் அனைவருக்குமே தலைமை ஏற்றார். இன்று உறுப்பினர்கள் தொகை அதிகரித்து செவ்வனே செயல்படுகிறது. ஆன்மீகத்துறை என்றால் அன்னாருக்கு பெரும் ஆனந்தம்! பக்தியில் பக்தன் இறைபணி செய்வதிலே நிகரற்ற நெஞ்சன்-தான் பிறந்த ஊரான அன்னமலையில் உள்ள வடபத்திரகாளியம்மன் ஆலய நிர்வாக செயலாளராகவும், பின்னர் அதே கோவிலில் 1986இல் இருந்து 1988 வரை தலைவராகவும், இருந்து தன் பணியை செவ்வனே செய்து கோயில் வளர்ச்சிக்கு அருந்தொண்டு புரிந்தார். பின்னர் பாண்டிருப்பு விஸ்வ பிரமகுல தேவஸ்தானங்களின் உபதலைவராக 1991இல் இருந்து 1993 வரை அரும்பணிகளை மேற்கொண்டார். 2005இல் இருந்து இறைவனின் திருப்பாதம் சேரும் வரை பாண்டிருப்பு விஸ்வப்பிரமகுல தேவஸ்தானங்களின் கணக்காய்வாளராக கடமை பெற்றார்.

நாட்டில் நெருக்கடிக் காலங்களில் சமூகத்தின் நலன்கருதி ஏற்படுத்தப்பட்ட சமாதானக் குழுவின் உறுப்பினராக 1988இல் இருந்து 2000 வரை தன்னால் முடிந்த உதவிகளை தன் சமூகம் கருதி செய்து வந்தார். மேலும் 2006இல் இருந்து இக்காலம் வரைக்கும் R.D.S.நிறுவன உறுப்பினராக சேவை கொண்டிருந்தார். அன்னாரின் அரும்பணிகளை போற்றுவதற்கோ வார்த்தைகள் இல்லை. ஆண்டவன் தன் திருவடிக்கு சிறப்பு சேர்க்க அழைத்த தினம் 25-04-2015.

வாழ்க அவர் நாமம்!
வாழ்க அவர் தொண்டு!
வாழ்க அவர் குலம்!
சேர்க அவர் பலம் - எமக்கு!
வளர்க அவர் புகழ்!

*பிரியமுடன்*
**தாஸ்கரன் குமுதா**
மகள் - மருமகன்

- நன்றி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா மகன் என் அன்பு மாமா

மருமகள் என்பதற்கோர் மகத்துவம் தந்து
மரியாதை செய்தீர்!
மருமகள் எனறென்னை ஒரு போதும்
நோக்கவில்லை மாமா நீங்கள்!
உமது பிள்ளைகளுள் பிள்ளையாக
பரிவு காட்டி நின்றீர் கோமகனே!
உமைப்பிரிந்து கதறுகிறேன் போனதெங்கே!
பொக்கிஷமே!
அணையாத தீபமான அன்பு மாமா!
உன்னுள் உறைந்த மருமகளின் ஆத்மார்த்த
காணிக்கை இது!
கண்ணில் நீர் பெருக மனம் உருகுதையா
உனது மீளாத்துயில் நினைக்க!
கடவுளாய் உனை நினைக்கின்றேன்
காப்பதெப்போ பரன் மகனே!
பறந்து விட்டாய் பாரை விட்டு மீண்டும்
பார்ப்ப தெப்போ பாச மாமா?
இயன்றவரை உழைத்து எம் இனிய நல்
வாழ்விற்காய் வழிகாட்டி வந்த மன்னா!
வெள்ளையுள்ளம் குழந்தை நகை கொண்டு
எம்முள் உலாவினீரே!
ஐயா உமக்கு இறுதி என்று ஒன்றும்
இல்லை எம்முடனே கூட நிற்பீர்?

இனி எப்போதுனைக் காண்போம்
ஏங்குகின்றேன் என் அன்பு மாமா!
உன் ஆத்மசாந்திக்காய் உயிர் உருக
பிரார்த்திக்கின்றேன்!

இங்ஙனம்
அன்பு மருமகள்
**கோகிலாதேவி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமைச் சகோதரனின் மீளாத்துயிலில்

ஆறாத்துயர் கொண்ட

## ஓர் அக்காவின் அழுகை...

ஐயோ தம்பி அருமைச் சகோதரனே!
ஆறாத்துயரை அளித்து விட்டுப் போனீரே!
இறந்த செய்தி கேட்டு ஏங்கித்தவித்து
நான் அனலிடைப் புழுப்போலே
அகம் நொந்து போனேனப்பா
அந்த நாள் ஞாபகங்கள்
அலைபோல் நினைவில் வர
ஆறாத சோகம் என்னை ஆட்டி வதைக்கிறதே
அம்மா அப்பாவுக்கு ஓர் அரிதான ஆண்பிள்ளை
ஆறு சகோதரிகட்கும் அன்பான சகோதரன் - நீ
செல்லப்பிள்ளையாக சீராக வளர்த்தோமே
ஆரம்பக்கல்வி முதல் உயர்தரக்கல்வி வரை
ஆற்றல் மிகு மாணவனாய் ஏற்றமுடன் பயின்றாய்
ஐந்தாந்தரப் புலமைப்
பரீட்சையில் சித்திபெற்று
வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில்
வளர்ந்தது உன் உயர்கல்வி - அகவை
இருபதிலே அரியதொரு சந்தர்ப்பம்
உத்தியோக வாய்ப்பு உனைத்தேடி வந்திடவே
உவந்து நீர் ஏற்றாய்
உபாத்தியாயர்
தொழிலும் சிலகாலம் எழிலாய் நடந்திடவே
இன்புற்றுவாழ இனிதோர் இல்லற வாழ்க்கை
அகமகிழ்ந்தேற்றீர் அகவை இருபத்து மூன்றில்
நகமும் சதையும் நன்னிட நலஞ்சேர்
இன்பமாய் கண்டீர் இனிது தேன் நிலவு
ஈன்றெடுத்தீர்கள்... இனிய புதல்வரை
நல்லறம் கொண்டீர் பெருமிதம் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியே ஒன்று பெருந்தனமென்று
பிள்ளைகள் அனைவர்க்கும் பெரிது புகட்டினீர்
ஆற்றிய விளைவை அறுவடை செய்து
பேறுகள் பெற்று பெருமை அடைந்தீர்
நீர் ஆற்றிய பதவி மேம்படக்கண்டு
ஆளுமை பெற்றீர் அதிபர் பதவி கொண்டு
இனிய சேவை இறுதி ஆகுமுன்
இளைப்பாறினீர் ஏனைய கண்டு

இளைத்த வயதிலும் சளைக்காதவன்போல்
ஏற்று நடாத்தினீர் இன் பலசேவை
சமயம் முதலாய் சமூகத் தொண்டுகள்
சான்றுகள் பகரும் இனிதவை கண்டு
மீண்டும் நான் கணிக்கின்றேன்
மாண்டவர் மீண்டு வருவதில்லை.
அன்பால் அமுதூட்டி
பண்பால் பாடம் சொல்லி
பாசத்தை கொட்டி வளர்த்த
என் தம்பிக் குட்டியே
என் சுவாசமேடா தம்பி - நீ
உன் மரணம் என்ற
செய்தி கேட்டதும்
என் செவிப்பறை வெடித்து
விட்டதேடா தம்பி கதறுகின்றேன்
என்னைத் தேற்றுவார் யாருமின்றி
உன் ஆத்மா சாந்தியும், ஓய்வும்
பெறப் பிரார்த்திக்கும் என்றும் தினம்
தினம் உன் நினைவால் வாடும்
மூத்த சகோதரி என்னை அக்கா என்று
யாரடா அழைப்பார் தம்பியே!

**திருமதி. முத்துரெத்தினம் இளையதம்பி**
*(ஜேர்மனி) பாண்டிருப்பு-02, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மாமா...

நீங்கள் எங்கள் குடும்பத்தின் விளக்கானீர்கள்...
உங்கள் நினைவுகள் பல, எத்தனை
என்று சொல்வது
உங்களுடைய மூத்த அக்கா மரகதவல்லி
அத்தான் சிவகுரு குடும்பத்துடன் வாழ்ந்து
கழித்ததை மறப்பதா!
மற்றும் அக்கா, தங்கைமார்களுடைய
குடும்பத்தோடு வாழ்ந்து
நன்மைகளைச் செய்தவற்றை மறப்பதா!
நீங்களே சம்புநாதப்போடியாரின்
முதல் மகள் துரோணாச்சாரி அவர்களின்
ஆண் வாரிசு.
மாமாவாக நான் கண்டது
உங்களைத் தான்.
எனது பாராயம் தெரிந்த நாள்
தொட்டு அள்ளி அன்னியோன்னியமாய்
வாழ்ந்து கழித்ததை மறப்பதா?
தந்தையின் கிராமத் தலைவர்
சேவைக்கு புகழ் சேர்க்க தானும்
சேர்ந்து உழைத்தீர்கள்
உங்களோடு நானும் சேர்ந்து கிராமம்
கிராமமாக வீட்டு இடாப்பு நிரப்ப
சென்றதை இன்னமும் மறக்க முடியவில்லை
மாமா! மாமா என்று அழைப்பது
உங்களை மட்டும்தான்
அந்த அன்பு வார்த்தையை
25-04-2015 அன்றே நிறுத்திச் சென்று விட்டீர்கள்
நான் மாமா என்று அழைக்க யாரும் இல்லை இனிமேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமலையில் பிறந்தாலும் உங்களது
அன்பாலும், அறிவாற்றலாலும்
ஓய்வூதிய உத்தியோகத்தர்கள்
அனைவரையும் ஈர்த்தெடுத்தாய்
அது தங்களது உயர்ந்த குணம்
உயர்ந்த சேவை.
அதனுடன் நின்று விடாது.
சமூகத்திற்கும், முதியோர்களின்
முன்னேற்றத்திற்கும் சரி அன்பு காட்டத் தவறியதில்லை.
குடும்பத்திற்கும், மனைவி, மக்கள்
அனைவருக்கும் அன்பு காட்டினீர்கள்
மக்களின் முன்னேற்றத்திற்காக
அரிய பாடுபட்டீர்கள் என்றும் மறப்பதில்லை.
நீங்கள் வையத்துள் வாழ்ந்தாலும்
உங்களுடைய கல்வி, சமூகத்தொண்டு
ஆலயப் பணிகளில் ஆற்றிய சேவை
மனிதருள் மாணிக்கமாகவும் விளங்கி
தெய்வத்தின் ஓர் உருவமாய்
ஒவ்வொருவர் உள்ளத்திலும்
நினைவில் நிற்கிறீர்கள் என்றால் மிகையாகாது.
நான் என்றும் உங்களை மறப்பதிற்கில்லை.
இறந்தாலும் இன்றும் என்றும் என் உள்ளத்தில்
உயிரோடு வாழ்பவராகத் தான் நினைக்கின்றேன்.
உங்களை மறப்பதற்கில்லை.

*அன்பு மருமகன்*
**சிவகுரு - சண்முகநாதன்**
*பொறியியல் ஆலோசகர்*
*அகில இலங்கை சமாதான நீதவான்*
*அரசடியம்மன் கோயில் வீதி,*
*பாண்டிருப்பு-02, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிக்கின்றேன் தனிமரமாய்

அன்னையாய்
அரவணைத்த அன்புடன் பாசம் காட்டிய
அண்ணாவே...
ஆண்டவன் அழைப்பையேற்று
அவசரமாய் சென்று விட்டீர்
அபலையாய் தங்கை என்னை
தவிக்க விட்டு!

வாரம் இருமுறை- என்
வாசலுக்கு வந்து நீங்கள்
வாகாய் கூறும் ஆறுதல் மொழியில்
தேறுதல் பெற்று தெம்புடன்
வாழ்ந்திருந்தேன்.
இனி...
யார் வருவார் என் வாசலுக்கு?
ஆறுதலும் யார் தருவார்?
தாங்க முடியவில்லை அண்ணா
தரணயில் நான் தனிமரம்தான்

இருளகற்றும் ஒளி விளக்காய்
எமக்கிருந்தாய் அண்ணா
ஏக்கம் கொள்ள வைத்துவிட்டு
எங்கு சென்றாய் அண்ணா
தாங்க முடியவில்லை - இத் தங்கை
தனிமரமாயான சோகம்

குவலயத்தில் அறியாமை இருளகற்றி
அறிவுச்சுடர் ஏற்றிய
அற்புத மனிதர் நீங்கள்
ஆண்டவன் சந்நிதியில்
அமர வாழ்வு பெற்று
உயர்வடைய உதிர்க்கின்றேன்
கண்ணீரை என் காணிக்கைகளாய்

*தனிமரமாய் தவிக்கும் தங்கை*
**சின்னத்துரை பாக்கியலெட்சுமி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தாமரை

மலர்கள் மண்ணிலே பிறந்து வளர்ந்து மண்ணிலே மணம் பரப்பி மண்ணிலே மடிந்து போகின்றது. இதே போல் தான் மனித வாழ்வும் மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து மண்ணிலே மணம் பரப்பி மண்ணிலே மடிந்து போகின்றது. மடிந்து போகின்ற குறுகிய மனித வாழ்வில் தானுண்டு, தன் குடும்பம் உண்டு என்று குறுகிய வட்டத்திற்குள் வாழாமல் பரந்து விரிந்த வட்டத்திற்குள்ளே வாழ்ந்தவர் அமரர் து. நடராசசிங்கம் அவர்கள்.

கட்டித் தயிரும், கரும்பும் இளநீரும், குற்றரிசிச் சோறும், கொடுவா மீன் கறியும் கொட்டிப்பிசைந்து கொடுக்கின்ற பைந்தமிழ் கிராமம் அன்னமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பண்பாடுகளையும், கலாசாரத்தையும், தமிழர் தம் உயர் விழுமியங்களையும் உயிராக மதிக்கும் மக்களைக் கொண்டதும் பாண்டவர் பத்தினியாம் பாஞ்சாலிக்கு கோயில் அமைந்துள்ளதுமான பாண்டிருப்புப் பதியினிலே புகுந்த இடமாக கொண்டவருமான அமரர் து. நடராசசிங்கம் அவர்கள் கல்வியிலே கரைகண்டு கல்விப் பணியில் அதிபராக தன்னை உயர்த்திக் கொண்டவர். தனக்கென்று ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கிக் கொண்டு விட்டுக் கொடுத்தல், நிமிர்ந்து நிற்றல் பங்குபற்றி தீர்மானம் எடுத்தல் ஆகிய முகாமைத்துவ திறன்களை பயன்படுத்தி தன் தொழில்சார் நிலையில் திருப்தி கண்டது மட்டுமல்லாமல், பேசப்படும் அதிபராகவே எம்மத்தியில் உயிர்ப்போடு வாழ்ந்தார். ஓய்வூதிய நிதிச்சங்கம், முதியோர் சங்கம் ஆகியவற்றின் செயலாளராக இருந்து உறுப்பினர்களின் உயர்வான வாழ்விற்கு உரமூட்டிய செயற்பாடுகளை என்றும் மறந்து விட முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடப்பணி வைத்தார் அடிகிலை உட்கொண்டார்
மடர்கொடியாளொடு மற்றனம் கொண்டார்
கிடப்பக்கமே கிளரகன்று போகிறீரென்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே
ஊரெல்லாம் கூடி நின்று அலறிற்று
பெயரினை நீக்கி பிணமென்று அழைத்திட்டு
சூறையற் காட்டிடை கொண்டு சென்று சுட்டிட்டு
நீரில் மூழ்கி நினைப்பொழிந்தாரே!

*- திருமூலர் -*

இதுதான் மனித வாழ்வு, இக்குறுகிய மனித வாழ்வில்
உயிரோடு வாழ்வதை விடவும் உயிர்ப்போடு வாழ்ந்தவர்
அமரர். து.நடராசசிங்கம் என்றால் மிகையில்லை
அன்னாரின் இழப்பை இட்டு மூக்கிழந்த முகத்தைப் போலும்
நோக்கிழந்த விழியைப் போலும், சுட்டவெடிபட்ட பச்சை
கிளி போலும் துடிக்கின்ற உறவுகளுக்கு என் இதயத்
தாமரையை காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஜீவாத்மா
பரமாத்மாவின் பாதார விந்தங்களை சென்றடைய
பாம்பணிந்த பரமன் அடியை பிரார்த்திக்கின்றேன்

*- ஓம் சாந்தி -*

**திருமதி. பாக்கியவதி மகாலிங்கம்**
*நிருவாக உத்தியோகஸ்தர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது கடைசி மகள் கிரிஜாவின் திருமணத்தின் போது
துணைவியார் - மாப்பிள்ளை சகிதம் 23-01-2014இல்...



அன்னார் தனது கடைசிமகள் கிரிஜாவின் திருமண வைபவத்தின் போது
கல்முனை பகிரங்க ஓய்வூதியர் நிதிய உறுப்பினர்களுடன் 2014இல்



ஓய்வூதியம் நிதியத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியமைக்காக
தசாப்த நிறைவு விழாவில் அன்னாருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கிய போது... 2014இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்...

அம்மப்பா அம்மப்பா என்று
ஆரை அழைப்பேனோ
ஆறுதலாய் நின் பணியை
ஆர்ரெமக்கு செய்வாரினி
இப்புவியில் உங்களுக்கு
இணையாய் காண்பதற்கு
ஈர்ரெழு ஜென்மங்கள்
சென்றாலும் வராதே...

கனவுகள் பல கண்டோம் - உங்களுடன்
கன காலம் வாழவென்று
காலனுக்கு பிடிக்கவில்லை - உங்களை
காத்திருந்து பெற்றுவிட்டான்

கிளிப் பேச்சு பேசுகின்ற - எங்களை
கிட்ட அணைத்து வைத்து
காதில் உபதேசம் செய்த நாள் - மீண்டும்
கிட்டாதே அம்மப்பா எங்குற்றாய் நீ

கல்விக் கடலாய் விளங்கிய உத்தமனே
கருணை வாழ்வே பெரு வாழ்வே
அல்லல் அகற்றி காத்து நின்றாய்
அன்னை தந்தையாய் எம்மை
மூத்த பேரப்பிள்ளையாகி தவிக்கின்றேன்
கண்ணீரால் நின் அடிபரவி
செய்பணி போதுமென்று சென்றாயோ.

மறக்க முடியுமா உன்னை
மறந்தால் தானே நினைப்பதற்கு
எந்தன் நினைவாகி விட்ட தாத்தாவே
மாண்டார் வருவாரோ மாநிலத்தில்
ஆயினும் ஏங்கி நிற்கின்றேன் உனைக் காண

மாதம் ஒன்று உருண்டோடி
மாண்டு நீயும் மறைந்துபோனாய்
மீண்டும் உந்தன் வரம்வேண்டி
இறைவன் பாதம் தொழுகிறேன்

*என்றும் உங்கள் நினைவில் வாழும் மூத்த பேத்தி*
**தாஸ்கரன் வருணிகா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புத் தாத்தாவே...

தாத்தா மிகவும் அன்பானவர்
அவர் எனக்கு உதவி செய்து தருவார்
நான் என்ன கேட்டாலும் வேண்டித் தருவார்
அவர் மிகவும் உன்னதமானவர்
அத்தோடு சுறுசுறுப்பானவரும் ஆவார்
எல்லோருக்கும் உதவி செய்யும்
மனப்பாங்கு உடையவர்
அவருக்கு மிகவும் விருப்பமானவர்கள்
குழந்தை செல்வங்களே – அவர்
எப்பொழுதும் நாங்கள் படித்து
வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும்
என்று ஆசைப்படுவார்
ஏனென்றால் அவர் ஆசிரியராகவும்
அதிபராகவும் இருந்தபடியால்
தாத்தா நீ வாழ்ந்த காலங்களில்
ஒவ்வொரு நிமிடத்தையும் மணித்துளியையும்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் நலத்திற்கும்
வளத்திற்கு ஆக செவ்வனே செலவு
செய்து விட்டு நினைவுகளை மட்டும்
நிறுத்தி நீண்ட பயணம் மேற்கொண்ட
அன்பு தாத்தாவே மாதம் ஒன்று ஓடி
மறைந்தாலும் ஆறாத்துயரில் கண்ணீர் மல்க
உங்கள் ஆத்மா சாந்திக்காக
என்றும் பிரார்த்திப்பேன்.

பேத்தி
**தாஸ்கரன் சிவாஞ்ஜனி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரும் வரைக்கும் விழி வழியை நோக்கும்

அன்பு உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாத்தா!
இனி உனக்கில்லை தாத்தா என யாரோ சொன்னார் காதில்
புரியவில்லை புரிதலுக்கும் விபரம் இல்லை - பூவுலகில்
மரணம் எனும் பதம் வேண்டாம் மறக்க வேண்டும்
விபரங்கள் தெரியும் சின்னக் காலம் தொட்டு
விலை மதிக்க முடியாத தங்கத் தாத்தா!
அடித்திடுவீர், அரவணைப்பீர், அறிவு ஊட்டி
அறுசுவையும் கொடுத்திடுவீர் அன்பைச் சேர்த்து!
பொழுது புலர் முன் புலர்வீர் புதுமைத் தாத்தா!
சுறுசுறுப்பு தேசத்தின் சொந்தக் கோமான்
அலைந்தலைந்து காரியங்கள் பலவும் பார்த்து
அருகினிலே வந்து, அழைத்து அமர்க என்பீர்!
தன் பாக்கெட்டில் கை நுழைய போகும் நேரம்
என் நா மட்டும் தித்திக்க ரசங்கள் ஊறும்!
இனிப்புக்கள், பிஸ்கட்கள், ஐஸ்கிறீம் என்று - கையதனில்
ஏதிர்பாரா இன்சுவைகள் வந்து சேரும்!
எங்கின்று இவையனைத்தும் காணவில்லை!
என் செய்வேன் என் தாத்தா எங்கு சென்றீர்!
பொன் நிகராய் அறிவு மதி புகன்றிடுவீர்!
என் பேரன் எனை வெல்வான் என்றிடுவீர்!
ஆண்டைந்துப் புலமையிலே சித்தி பெற்றேன்
அதையறிந்து உச்சிமோந்து முத்தம் தந்தீர்!
தாய், தந்தை பெயர் காத்து தழைப்பாய் என்றீர்!
தாத்தாவின் புகழ் போற்றி தடம்பதிக்கச் சொன்னீர்!
செய்வதறியாமல் இன்று தடுமாறுகின்றேன்
சிவபரனே எம்முயிரை எம்மிடத்தில் சேர்த்துவிடு!
மாண்டவர்கள் மீழ்வதில்லை என்று பல கதைகள் கேட்டோம்
என் தாத்தா மரிக்கவில்லை வரும் வரைக்கும்
விழி வழியை நோக்கும்!

*பாசப்பேரன்* **சதுர்நிதூஷன் தாஸ்கரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புமிகு தாத்தாவே...

அழுத விழிகள் ஓயவில்லை
அன்பு முகம் மறையவில்லை
அரவணைத்த கைத்தடங்களின்
ஈரமென்னும் காயவில்லை
அன்புமிகு தாத்தாவே!
எங்கு சென்றீர் – நீங்கள்!

காலைக் கதிரவனை அழைத்து வந்து
களிப்புடன் கதைபேசி
அன்பை ஊட்டி ஆனந்தம் காண்பாய்
அன்புமிகு தாத்தாவே
எங்கு சென்றீர் – நீங்கள்!

காணும் கண்களில் தென்படவில்லை
தேடியே நாங்கள் அழுகின்றோம்
அன்பினை ஊட்ட யார் இனி வருவார்?
எங்களைத் தவிக்க விட்டு விட்டு
அன்புமிகு தாத்தாவே
எங்கு சென்றீர் – நீங்கள்!

இறைவன் மடியில் உள்ளாயோ!
ஏங்கும் எங்களைப் பாராயோ!
உன் அன்பின் செல்வங்கள் அழுகின்றன
ஆறுதல் வார்த்தைகள் கூறாயோ
அன்புமிகு தாத்தாவே
எங்கு சென்றீர் – நீங்கள்

*அன்பு மிகுந்த பேரப்பிள்ளைகள்*
**அட்சரன், பிரத்தியட்சன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளாத் துயரின் நினைவில்...

அமரத்துவமடைந்த எனது மாமனார் ஓய்வு பெற்ற அதிபர் திருவாளர் துரோணாச்சாரி நடராசசிங்கம் அவர்கள் ஓர் ஓயாத கடின உழைப்பாளி. இருந்தும் அவர் மரணித்த போது ஒரு செல்வந்தராக அல்லாமல் ஒரு சாதாரண மனிதநேயம் மிக்க பண்பாளராகவே மறைந்தார். காரணம் இவ்வையகத்தின் சமூக வாழ்க்கை போராட்டக் களத்தில் அவர் ஓர் உண்மை உழைப்பாளராக திகழ்ந்தமையே. இது நான் சொல்லி புரிய வேண்டிய விடயமொன்றல்ல.

அவர் ஓர் ஆசிரியராக பிரதி அதிபராக, அதிபராக என்று அரச பதவிகளைப் பெற்று சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றபோதும், தனது இறுதிக் காலம் வரையிலும் கல்முனைப் பிராந்திய ஓய்வூதியர் சங்க நிதியத்தின் செயலாளராக பணிபுரிந்து அலுவலகக் கடமையில் ஈடுபட்டிருந்த போதே சுகவீனமுற்று அங்கிருந்து வைத்தியசாலை சென்று சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணத்தைத் தழுவினார் என்பதும் இவரது விடா முயற்சிக்கு எடுத்துக் காட்டுகளாகும். மேலும் சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம், கமு/சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயம் என்பவற்றில் இவரது பெயரைத் தாங்கி நிற்கும் கட்டடங்கள் இவரின் அர்ப்பணிப்பான செயல் அப்பிரதேச மக்களின் மனங்களில் எவ்வாறு ஆழப்பதிந்திருக்கிறது என்பதையும் யாராலும் இலகுவில் ஊகிக்க முடியும்.

தன்னால் இயன்றளவுக்கு சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அந்த வகையில் தான் பிறந்த ஊரான அன்னமலைக் காளிகோயிலின் தலைவராகவும், பாண்டிருப்பு ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலய செயலாளராகவும், கணக்குப் பரிசோதகராகவும் பாண்டிருப்பு-02B பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புவியில் மனித வாழ்வு முன்ஜென்ம வினைப்பயனால் விளைகின்றது என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதனையே அப்பர்சுவாமிகள் வினையையும் அதனால் விளையும் பயனையும் தனது பதிகத்திலே **"விண்ணுற அடுக்கிய விறகு"** என்ற வரிகளாலும் திருவங்கமாலையின் இறுதிப் பதிகத்திலே **"உற்றார் யாருளரோ உடல் கொண்டு போம்பொழுது"** என்ற வரிகளாலும் விளக்குகின்றார். அதற்கேற்ப அவர் பிறந்த குடும்பமும் அவருக்காக அவர் அமைத்துக் கொண்ட குடும்பமும் அதனால் உருவான மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர்களும் அவர் இவ்வுலக கதாபாத்திரத்தை சிறப்பாக நடிக்கக் கிடைத்த **"வினைத்துணைகள்"** ஆகும் இவற்றையெல்லாம் அவர் சிறப்பாக ஒழுங்கமைத்துக் கொண்டு சிறந்த சகோதரனாக, சிறந்த கணவனாக சிறந்த தந்தையாக சிறந்த உற்றார் உறவினராக எம்மிடையே வாழ்ந்து இப்பிறவிக்கான உலக வாழ்வை நிறைவு செய்திருக்கிறார் என்பது மகிழ்ச்சியே! குடும்பத்தின் சார்பில் உங்கள் ஆன்மா இறைநிழலில் சாந்தியடைய பிரார்த்தித்து எழுதுகிறேன்

**வானத்து விடிவெள்ளியாய்**
**அடைபட்ட கதவிற்குள்**
**சிறைப்பட்டு**
**காவியமானாய்...**

"ஓதுவோம் உணர்வோம் கருவாசம் போக்கும் திருவாசகத்தின் சிவபுராணத்தை"

**திரு.கே.ஆர்.தருமராசா** (ஆசிரியர்)
B.A.Dip.in.Edu (Merit)
இளஞ்சைவப்புலவர்
இந்துதர்மாசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹாஜ் M.I.S.,H.ஜமீல்
198, புதிய வீதி,
கல்முனைக்குடி-13
14-05-2015

கல்முனைப் பிரதேச பகிரங்கசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் என்ற வகையில் கடந்த எட்டு வருடங்களாக எமது நிதியத்தின் செயலாளராகப் பணிபுரிந்த அமரர் T.நடராசசிங்கம் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரவும், அவரைப்பற்றிய எனது அபிப்பிராயத்தைப் பகிர்ந்து கொள்ளவும் எனக்குச் சந்தர்ப்பம் தந்த அவரது குடும்பத்தவர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது மறைவினால் கவலைப்படுகின்ற அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருடன் நானும் பங்குகொள்கின்றேன்.

2007ல் நடைபெற்ற எமது நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட திரு.T.நடராசசிங்கம் அவர்கள் நிதியத்தின் சட்டதிட்டங்களையோ, செயற்பாட்டு முறைகளையோ, முன்கூட்டியே அறிந்திருக்கவில்லையாயினும் ஒரு நாளில் பெற்றுக்கொண்ட பயிற்சியையும், தனது அனுபவத்தையும் பயன்படுத்தி இந்நிதியத்தின் சகல விடயங்களையும் மிகவும் சிறந்த முறையில் செயல்படுத்திய செயல் வீரர் என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

எமது நிதியத்தைப் பொறுத்தவரை அங்கத்தவர்களின் நிலைமைகளையும் தேவைகளையும் கருணையுடன் கவனித்து அர்ப்பணிப்புடன் ஆற்றிய அவரது சேவையும், அங்கத்தவர்களின் மனங்கோணாமல் அன்புடன் அரவணைத்து உதவிய மனப்பாங்கும் காலத்தால் அழிக்க முடியாத நினைவாகும். வாக்குறுதியை நிறைவேற்றுதல், நேரந் தவறாத கடமை உணர்வு, மனிதநேயம், எடுத்த காரியத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நேரத்திற்கு முடிக்கும் முயற்சி, நல்லொழுக்கத்துடனான பழக்க வழக்கம், எந்தவொரு காரியத்திலும் அறிவுபூர்வமான அணுகும் முறை, நிதியத்தின் செயலாளர் என்ற வகையில் நிதியத்தின் சகல நடவடிக்கைகளையும் ஆவணப்படுத்திச் செயற்பட்ட விதம் எல்லாம் அவரது ஆற்றலினதும், அனுபவத்தினதும் முதிர்வே என்றால் மிகையாகாது.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாகவே அவரை தொடர்ந்து எட்டு வருடமாக இந்நிதியத்தின் செயலாளராகத் தெரிவு செய்தார்கள் என்பது மட்டுமல்ல எல்லா வருடாந்தப் பொதுக்கூட்டங்களிலும் பலராலும் பாராட்டப்பட்டார். மேலும் எமது நிதியத்தின் சார்பாக அவரது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி பாராட்டுப் பத்திரம் வழங்கியதோடு நின்றுவிடாமல் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

தனது சொந்த வாழ்க்கையில் கடமை தவறாதவராகவும், கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றியவராகவும் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் வாக்கியத்தை மெய்ப்படுத்தி வாழ்ந்த பெருந்தகை அமரர் T.நடராசசிங்கம் அவர்களை இறையருள் பெற்ற பாக்கியவான்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

அவரைப்போலவே நாம் அனைவரும் மரணத்தைத் தழுவ வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதை மனதில் கொண்டு இதற்கு ஆயத்தமாக வாழ்ந்து இறையருள் பெற முயற்சிப்போமாக.

அன்புடன்

**M.I.S.H.ஜமீல்**

பகிரங்க ஓய்வூதியர் சங்கத் தலைவர், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத் துயரில் வாடும்...

குடும்பத்திற்கு நிழல் தந்த பெருவிருட்சமாய்
இருந்த நீங்கள் இன்று எம்மை விட்டு நீங்கி
நிலை குலைய விட்டதேனோ?

தொலை தூரப்பயணம் என்றே நினைத்து
இன்று எம்மிடையே தொலைந்து விட்டதேனோ...

கரம் பிடித்து சுகம் கண்ட உங்கள் இல் வாழ்வில்
நீங்கள் குறை என்று ஒன்றும் வைக்கவில்லையே
ஓர் நாளும்...

விரல் ஒடிந்த ஓவியன் போல் இன்று தனிமையில்
நிற்க வைத்ததேனோ இந்த இல்லாளை

எங்களிடை வாழ்ந்திருந்த உழைப்பின் சிகரம் - நீ
மரணித்த பின் தான் உன் கை ஓய்வில் இருப்பதை
நாம் அறிவோம்

மங்காத சூரியனாய் மணம் வீசும் புத்தம் புது மலராய்
மரணித்த உங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவில் பங்கு பெறும்*
**திருமதி. R.கிருஷ்ணமூர்த்தி**
**K. சஹானா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களால் மறக்க முடியாத தெய்வம்

## நடராசசிங்கம் அவர்கள்...

அமரர் நடராசசிங்கம் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய துயரச் செய்தியினை கேட்டு நாங்கள் ஆழ்ந்த கவலையில் கண்ணீர் விட்டு அழுதோம். அமரர் நடராசசிங்கம் அவர்கள் எங்களது உறவினர் மாத்திரம் மட்டும் அல்ல. எங்கள் குடும்பத்திற்கு மேலானவர்.

நடராசசிங்கம் அவர்களின் இழப்பு எங்கள் குடும்பத்தை நிலை தடுமாற வைத்து விட்டதுடன் நல்ல மனித விழுமியங்கள் நிறைந்த வழிகாட்டி ஒருவரை இழந்து விட்டது போல் நாங்கள் உணர்ந்தோம். அன்பாகவும், கனிவாகவும் பேசி பலரையும் கவர்ந்து புத்திமதி கூறும் அந்த புன்முறுவல் பூத்த முகம் இன்னும் எங்கள் கண் முன்னால் காட்சியளிப்பதாகவே எங்களுக்கு தெரிகின்றது.

எங்கள் தெய்வம் நடராசசிங்கம் அவர்கள் நாம் அறிந்தவரை பலராலும் விரும்பப்பட்ட எல்லோராலும் இன்முகத்துடன் வரவேற்கப்படும் ஓர் அறிவுச் சுடராக வலம் வந்தவர். அவர் எங்களுக்கு வாழ்க்கையின் சுகதுக்கங்கள் பற்றியும் நன்மை தீமைகள் பற்றியும் அறிவுரைகள் கூறி வல்லவராக இருந்ததை நாங்கள் நேரடியாக கண்டிருக்கின்றோம்.

அன்பு தெய்வம் நடராசசிங்கம் அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாததாகும். அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்களுக்கும் எங்களது குடும்பம். ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.

**இராஜகுமார் குடும்பத்தினர்**
*பாண்டிருப்பு-02.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசை மாமா...

முத்தென ஒரு தாய் மாமாவைக் கண்டோம்
வாழ்வெடுத்து வந்த நீ - எங்களுடன்
தோள் கொடுத்து நின்றீரே மாமா
மண்ணுலகம் வாழ்ந்தது - போதுமென்றா
விண்ணுலகம் சென்றீர் மாமா...

உயர்ந்த எண்ணங்களால் - என்றுமே
நிமிர்ந்து நிற்கின்றீர் எம் மனதில்
குடும்பத்திற்கு உத்தம தலைவனாய் - குடும்பத்தில்
குலவிளக்காய் ஓங்கி பிரகாசித்தீர் இவ்வுலகில்

உங்கள் உதவிகளால் - எம்
தேவைகள் நடக்க - உம்
துணையால் தடைகள் பல கடந்தோம்
அறிவுக் கடலே எங்கள் அன்பு மாமா!
உங்களுக்கு நிகர் எதுவுமே இல்லை மாமா.

நீக்கமற எங்கள் நெஞ்சினிலே - என்றும்
வாழும் எங்கள் மாமா பிழையென்ன
செய்தோம் நாங்கள்! பேசாமல் எம்மை
விட்டு ஏன் சொர்க்கம் சென்றீர்கள் மாமா

பண்பாகப் பேசி எம்மை வழிகாட்டினீர்கள்
களங்கமில்லா எண்ணத்தோடு எம்மோடு
பேசிப் பழகினீர்கள் - மாமா இன்று
எங்களை விட்டு காற்றாய்ப் பறந்துவிட்டீர்கள் - மாமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா நீங்கள் உயிருக்குப் போராடியதை
எங்களால் பார்க்கவே முடியவில்லை
மாமா மாமா என்று ஆயிரம் முறை
விம்மி அழுதோம் - நாங்கள்

உங்களைப் பார்ப்பதற்காக ஓடோடி வந்தோமே
இல்லை இல்லை என்று இழுத்துச் சென்று
விட்டானே காலன்
இன்னும் ஒரு முறை பார்க்க மாட்டோமா என
இடிந்து நிற்கின்றோம்

என் தம்பிமார் வரும் வரை கூட காலன்
விட்டு விடவில்லையே மாமா
உங்கள் அன்பிற்கு ஈடு இணை யாருமே
இல்லை மாமா

எறும்புக்கு நிகராய் ஓய்வில்லாமல் வாழ்ந்தீர்கள்
இப்போது நிரந்தர ஓய்வு பெற்றீர்களா மாமா?
எங்கள் அன்பு மாமா உங்கள் முகம்
மறக்கவே முடியவில்லை.

*எங்கள் ஆசை மாமாவுக்கு*
*எங்கள் கண்ணீர் பூக்கள்...*

*மருமக்கள*
**பரமேஸ்வரன், பத்மராணி, பத்மராஜா**
**அமிர்தலிங்கம், சிவானந்தராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது இரண்டாவது புதல்வி விஜயா திருமணத்தின் போது
குடும்ப சகிதம்... 08-11-2000 இல்



இந்நிதியத்தின் செயலாளராக திரு. T.நடராசசிங்கம் அவர்களின்
முழு அர்ப்பணிப்புடனான சேவையைப் பாராட்டி 8வது வருடாந்தப் (2011)
பொது கூட்டத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பாவின் நினைவுகள்

எங்கள் குடும்பம் என்னும் ஆலமரத்தின்
ஆணிவேரே நீங்கள்தான்
உங்களின் அரவணைப்பில் வளர்ந்த
விழுதுகள் நாங்கள் – பெரியப்பா

என்ன வேலை செய்தாலும் அதில்
முழுமைகாணும் திறமை
உங்களிடம் மட்டும்தான் இருக்கிறது – பெரியப்பா

என் பிஞ்சுவிரல்களைப் பிடித்து
ஏடு தொடங்கச் சொன்னீர்கள்
"நான் ஏடு தொடக்கிய பிள்ளைகளெல்லாம்
இப்பொழுது பல்கலைக்கழகத்தில்
நீயும் அப்படியான ஓர் நிலைக்கு வருவாய் என்று"
உங்கள் வாக்கு பலித்துவிட்டது ஆனால்
அதை கண்ணாறக் காண
நீங்கள் என்னுடன் இல்லையே – பெரியப்பா

"வீட்டே வரும்போது வைட் சேர்ட் போட்டுற்று
எல்லா கடமைகளிலும் நீங்கதான் முதலாவதாக
இருப்பீங்க பெரியப்பா"
என்று நான் சில வார்த்தைகள் பேச
சிறு புன்முறுவல்களை உதிர்த்துவிட்டு
என்னையும் நகைச்சுவை பண்ணுவீர்கள்
இன்று வைட் சேர்ட் இல் யாரைப் பார்த்தாலும்
உங்கள் நினைவுதான் வருகின்றது – பெரியப்பா

இன்று நீங்கள் எங்களுடன் இல்லையென்றாலும்
நீங்கள் விட்டுச்சென்ற நினைவு என்னும் பொக்கிஷத்தை
கண்ணீருடன் எங்கள் மனதில் வைத்திருப்போம் – பெரியப்பா

உங்கள் பெறாமகள்
**லீவோஜி தேவரஞ்சன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழுகின்ற மக்களுக்கு பாடமாக அமையும் அன்னாரின் வாழ்க்கை

அன்னமலையில் பிறந்து செல்லப் பிள்ளையாக வளர்ந்து, பாண்டிருப்பில் நல்லதொரு கணவனாகவும் பாசமிகு தந்தையாகவும், உற்றார், உறவுகளை மதிக்கின்ற நல்ல உறவினனாகவும் காலத்துக்குக் காலம் நீலம், பச்சை, சிவப்பு என நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி மனிதர்கள் மத்தியில், சமூக இன உணர்வு மிக்க நேர்மையான சிறந்த சமூக சேவையாளனாகவும் நம்மத்தியில் வாழ்ந்து இன்று அமரராகி விட்ட நடராசசிங்கம் அவர்களோடு எனது முதல் நியமனம் முதல் அதாவது 1975ம் ஆண்டு முதல் பழகும் வாய்ப்பை பெற்றேன். அதிலும் 1985ம் ஆண்டு அவரின் தலைமையில் நாவிதன்வெளி அன்னமலை ம.வி.ஆசிரியராக சேவையாற்றியதினால் அன்னாரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு நிறையவே கிடைக்கப் பெற்றது. ஆதலால் அவர் என் பார்வையில் ஓர் முதல்தர முகாமையாளராக திகழ்கிறார். அதாவது "ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்கனும், பாடுகிற மாட்டை பாடிக் கறக்கனும்" என்பதற்கு இணங்க எவரோடு எப்படிப் பழக வேண்டுமோ அவரோடு அப்படிப் பழகி நிறையப் பயன்களை பாடசாலைக்காக பெற்றவர்.

எனக்கு ஒரு சிறந்த முயற்சியாளராக தெரிகிறார். தனது பாடசாலையை வளர்த்திட எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். அவரின் முயற்சியால் வளர்ந்த பாடசாலைகள் அவரின் நாமத்தை பாடசாலை மண்டபத்துக்கும், விளையாட்டு இல்லங்களுக்கு சூட்டி இருப்பதை இன்னும் காணலாம். அவரது குடும்ப வருமானத்தை பெருக்கிட அவர் மேற்கொண்ட முயற்சிகளை எண்ணிப் பார்த்து வியந்திருக்கின்றோம். இவ்வாறாக ஓய்வுக்கு உரிய வயது வரமுன்னே ஓய்வைப் பெற்ற போதும் அவர் ஓய்வாக ஒரு நாளும் இருந்தது கிடையாது.

கோவில் நிர்வாகத்திலும், கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், முதியோர் சங்கத்திலும், இளைப்பாறியோர் சங்கத்திலும் பதவிகளை தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி வரை வகித்து அவரது பதிவக் காலத்தில் அவற்றை சிறப்புற வைத்தார். அவர் உண்மையில் ஓய்வாக இருந்த நாட்கள் வைத்தியசாலையில் இருந்த அந்த இறுதி இருபது நாட்களுமேயாகும்.

முன்திட்டமிடலில் வல்லவர். அவரால் முன் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் சிறப்பான வெற்றிகளை பெற்றுக் கொடுத்தமையை நேரடியாகவே கண்டிருக்கின்றேன். அவரது மரணத்தைக் கூட முன்கூட்டி திட்டமிட்டு எவ்வாறு நடத்த வேண்டும் என உரியவர்களிடம் சில அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளார். இவ்வாறாக எக்காரியத்தையும் சிறப்பாக செய்து முடிக்கக் கூடிய ஆற்றல்மிக்க அருமையான மனிதரை நாம் இழந்து விட்டோம். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாததாக இருந்த போதிலும், உயிர் உள்ள அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலமே வாழும். இது உயிர் உள்ளவற்றின் ஓர் இயல்பு. அந்த குறிப்பிட்ட காலத்தில் எப்படி வாழ்ந்தார் என்பதே முக்கியமாகும். அந்த வகையில் அமரர். நடராசசிங்கம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளையும் அவரது வழிகாட்டல்களையும் பின்பற்றி பயன் பெற்ற பலரில் நானும் ஒருவன் என்பதில் பெருமையடைகின்றேன்.

இன்று அன்னார் எம்மோடில்லை. இருந்தபோதிலும் அவர் வாழ்ந்த வாழ்க்கை முறைகள் வாழுகின்ற மக்களுக்கு பாடமாக அமையும் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தாருக்கும் இழப்பை ஈடு செய்யக் கூடிய வல்லமையை வழங்க வேண்டும் என வேண்டி நிறைவு செய்கின்றேன்.

*- ஓம் சாந்தி -*

**சோ. கோவிந்தராஜா**
அதிபர்
*கமு/ விஸ்ணு மகா வித்தியாலயம்,*
*பாண்டிருப்பு-02, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மாமாவுக்கு...

நெல்வளம் குன்றா அன்னமலையூர்தனிலே
துரோணாச்சாரி தங்கப்பிள்ளையின்
ஒரே மகனாய் ஆறு பெண் சகோதரிகளிடையே
விண் மீனாய் நீ தடம் பதித்தாயே.

பண்புடன் கூடிய கல்வியை நீ வளர்த்து
ஆசானாய் அடி பதித்து அறிவினை ஊட்டியே
பல கல்விமான்களை உருவாக்கினாயே
அவனியில் உன் புகழ் பேசப்படுகிறதே.

என் தாயுடன் உடன் பிறந்த சகோதரனாய்
நீ வாழ்ந்து குடும்பத்தின் இன்ப துன்ப நிகழ்விலே
தன்னடக்கத்துடனே முன்வந்து சேவை புரிந்தாயே
உறவுகளுக்கு அறிவுரைகள் பல கூறினாயே.

ஊரிலே உன் சேவையோ பல
ஆலயத் தொண்டினையும் சீராய் முடித்தாயே
இளைப்பாறியோரை ஒன்று கூட்டியே
உதவிகள் பல புரிந்தீரே

போதும் எனது சேவை என்றே
இளைப்பாறிச் சென்றீரே
விண்ணுலகில் அமைதியாய் நீ வாழ
எல்லாம் வல்ல இறைவனைத் துதித்து நிற்கின்றேன்.

பாசமுடன்

**மருமகன் சா. கிருபைராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மறக்க மறுக்கும் மாமனிதன்...

மனம் மறக்க மறுக்கும் மாமனிதன், வித்தியா விருத்திக்காக தனது வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்த நல்லாசான், சமூக சேவகன் எனது பாலிய நண்பன், ஓய்வு பெற்ற அதிபர், அமரர் து.நடராாசசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நீங்குவது இன்னும் எனக்குக் கஷ்டமாகவுள்ளது. ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, கல்வியைத் தொடர்வதற்காக, அவரும் நானும் அவருடைய மைத்துனர் அமரர் சின்னத்துரையும் மட்/காத்தான்குடி மத்திய கல்லூரியில் இணைந்தோம். அப்பிணைப்பானது அவரின் இறுதி மூச்சு வரை நிலைத்திருந்ததை எம்மால் எவ்வாறுதான் மறக்க முடியும். ஆசிரியத் தொழில் மூலம் புத்துயிர் பெற்ற எமது நட்பு கல்முனைப் பிரதேச ஓய்வூதியச் சங்கம் வரை இறுக்கமடைந்திருந்தது.

நண்பர் நடராாசசிங்கத்தைச் சந்திப்பதற்காக அவருடைய தாயகமாகிய அன்னமலைக்கு பல தடவை சென்றிருந்தேன். அவரிடம் சமயப்பொறை கிஞ்சித்தும் கிடையாது சந்திக்கும் போதெல்லாம் “மூசா மச்சான்” என்ற வார்த்தையைத் தவிர வேறு ஏதும் கிடையாது. கல்முனை ஓய்வூதியச் சங்கத்தின் செயலாளராக பல வருடங்கள் இறுதி மூச்சுவரை எவ்வித பிரதியுபகாரமும் எதிர்பாராமல் சேவையாற்றியுள்ளார். அப்பொழுதுதெல்லாம் அவருடைய ஆளுமையைக் (Personality) கண்டு ஆச்சரியமடைந்துள்ளேன். அவருடைய மறைவு ஓய்வூதியச் சங்கத்துக்குப் பாரியதோர் இழப்பு என்பதை சம்பந்தப்பட்ட எவருமே மறுக்க முடியாது.

மனிதன் மரணத்துக்குரியவன். அவன் எப்போது மரணிப்பான், எங்கு மரணிப்பான் என்பன பற்றி எம்மைப் படைத்த இரட்சகனையன்றி எவருமே கண்டு கொள்ள முடியாது. அவன் வாழும் காலை நல்லது செய்தால் அவனுடைய புகழ் உலகம் உய்யும் வரை நிலைத்திருக்கும். எனவே, நல்லதையே செய்து மரணித்த நண்பன், நடராாசசிங்கத்தின் புகழ் என்றுமே மங்காது என்பதில் எமக்கு என்றுமே நம்பிக்கையுண்டு.

இறுதியாக அன்னாரின் மனைவி, மக்கள், குடும்ப உறுப்பினர்கள் சகலருக்கும் எனது சார்பாகவும் குடும்பத்தினர் சார்பாகவும் அனுதாபம் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

- நன்றி -

பன்னூலாசிரியர்: **S.M.மூஸா** BA,JP
மருதமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு. இவ்வாக்குக்கு அமைய வாழ்ந்தவர்தான் பெருமைக்குரிய அமரர். துரோணாச்சாரி நடராசசிங்கம் ஐயா அவர்கள்.

மக்களுக்கு சேவை செய்வதையே தனது முழுமூச்சாக கொண்டு இறுதி நாள்வரை போராடியவர் என்று சொன்னால் மிகை ஆகாது. தனக்கு இருந்த மிகவும் பாரதூரமான இருதய நோயைக் கூட கவனத்தில் கொள்ளாது பல வருடங்கள் ஓய்வூதிய நிதியத்தின் செயலாளராக பகல் இரவு பாராது அளப்பரிய பணி புரிந்து சேவை செய்துள்ளார் அது மட்டுமல்ல. கிராம முன்னேற்ற சங்கம், முதியோர் சங்கம் போன்றவற்றிலும் முக்கியமான பொறுப்புக்களை வகித்து கிராமத்திற்கும் மக்களுக்கு பல நன்மைகள் செய்துள்ளார்.

அன்னார் இழப்பு அவர்களது குடும்பத்திற்கு மட்டும் அல்ல. எம் எல்லோருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். எம் எல்லோரிடத்திலும் கனிவாகப் பேசி புரியாத விடயங்களை தெளிவாக எடுத்துக் கூறி பிறருக்கு புரிய வைக்கும் ஆற்றலும் தன்பால் ஈர்க்கும் திறனும் கொண்டவர். கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அவற்றை எல்லாம் அன்பாலும் பண்பாகவும் பொறுமையாக பேசி தீர்க்கும் திறன் கொண்டவர். ஓய்வூதிய நிதியத்தில் அமரர். நடராசசிங்கம் செயலாளராக இருந்த காலத்தில் தான் அதிகூடிய மரண பணிக் கொடை வட்டி இல்லா இலகு கடன் போன்ற அரிய பல நல்ல திட்டங்களை ஏற்படுத்தி ஓய்வூதியம் பெறுபவர்களின் நன்மதிப்பை பெற்றவர். அன்னார் இழப்பு எமது ஓய்வூதிய நிதியத்தில் மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அவரது ஆன்மா இறைவன் நிழலில் சாந்தியடைய வேண்டும் என எங்கள் ஓய்வூதிய சங்கத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றேன்.

**P. பொன்னுத்துரை**
ஓய்வூதிய சங்க உறுப்பினர்
பிரதேச செயலாளர் பிரிவு - கல்முனை.

*ஓம் சாந்தி*
*- நன்றி -*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சைவிட்டுஅகலாதமனிதநேயமிக்கசெயல்வீரர்
## அமரர்.து.நடராசசிங்கம்

சக ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் பல ஆண்டுகள் அவருடன் கடமையாற்றிய காலங்கள் என்றும் என் நெஞ்சைவிட்டு அகலாத நினைவுகளாகும். அன்னாரது மரணச் செய்தி கேட்டதும் எனது மனம் பதறிப் போய்விட்டது. இவ்வளவு சீக்கிரம் எம்மை விட்டுச் சென்று விடுவார் என்று நினைத்திருக்கவே இல்லை.

என்னைப் பொறுத்தவரை இன்று அதிபராகப் பதவி பெற்று ஓய்வு நிலை அடைந்திருக்கின்றேன் என்றால் அதற்கு அவரது பங்களிப்பும் ஒன்றாகும். 1988ம் ஆண்டு அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற வைத்து, அதில் சித்தியடைந்து 01-06-1989ம் திகதி முதல் அதிபராக நியமனம் பெற்று அவருடன் உதவி அதிபராகக் கடமையாற்றினேன். 1988ம் ஆண்டு அவர் நாவிதன்வெளி அன்னமலை அ.த.க. பாடசாலைக்கு கல்முனை பிரதேசத்திலிருந்து திறமை மிக்க ஆசிரியர்களை அழைத்துச் சென்று ஒரு குடும்ப அங்கத்தவர்கள் போல் நேசித்து அப்பாடசாலையை வளர்ச்சியடையச் செய்தார். அது மட்டுமன்றி ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அப்பிரதேசத்தில் படித்த இளைஞர் யுவதிகளை தொண்டராசிரியர்களாக நியமித்து ஒன்பதுக்கு மேற்பட்டவர்களை நிரந்தர ஆசிரியர்களாக்க அரும்பாடுபட்டு உழைத்தார். அவ்ஆசிரியர்கள் இன்றும் அவரை நினைவு கூர்கின்றனர்.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்"**

எனும் திருக்குறளுக்கமைய அவரை நாடி அவர் வகித்த பதவிகளும் சிறப்படைந்தன. அப்பதவிகளுக்கு பொருத்தமானவராக இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிவரை அவர் கல்முனை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராக இருந்து ஓய்வு ஒழிச்சலின்றி கடமையாற்றி நிதியத்தின் சகல அங்கத்தவர்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். அவரின் இழப்பு எம் நிதியத்தின் எல்லா அங்கத்தவர்களின் மனதிலும் துயரத்தை ஏற்படுத்தி விட்டது.

அவரது இழப்பு அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தாங்க முடியாத துயரத்தை வழங்கி விட்டது. இறைவன் அவர்களுக்கு ஆன்ம பலத்தையும் சாந்தியையும் வழங்கி, அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**செ. சோமசுந்தரம்**
*ஓய்வு பெற்ற அதிபர்*
*கல்முனை-01.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை உணர்வுடன் சமூகப் பணியாற்றியவர்

## அமரர்.து.நடராசசிங்கம் ஐயா அவர்கள்

இவர் நீர்வளமும் நிலவளமும் திருவளமும் நிறைந்து விளங்கும் அம்பாறை மாவட்டத்தின் அன்னமலைக் கிராமத்தில் சிறப்பான குடும்பத்தில் பிறந்தார். இளமைக் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கி புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து காத்தான்குடியில் உயர்கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளை பெற்று ஆசிரியர் தொழிலில் தனது அரச பணியை ஆரம்பித்தார்.

தனது துணைவியாக பாண்டவர் பதியெனப் போற்றப்படும் பாண்டிருப்பு எனும் கிராமத்தில் இ.தனலெட்சுமி என்பவரை கரம்பிடித்து நன்மக்கள் 06 பேரின் தந்தையாக விளங்கி பிள்ளைகளின் கல்வி மற்றும் நல்வாழ்விற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்து அதிலும் வெற்றி கண்ட பெருமகனாகத் திகழ்ந்தார்.

ஆசிரியர் தொழிலைத் தொடர்ந்து அதிபராக நியமனம் பெற்று கமு/அன்னமலை நாவிதன்வெளி மகா வித்தியாலயம், கமு/சேனைக்குடியிருப்பு கணேசா தமிழ் மகா வித்தியாலயம் என்பவற்றில் அதிபராக கடமையாற்றி அப்பாடசாலைகளில் பௌதீக வழங்களை தனது முயற்சியினால் பெற்று அம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து அவர்களின் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. மேலும் பல கல்விமான்களை உருவாக்குவதற்கு காரண கர்த்தாவாகவும் அப்பகுதி மக்களினால் மதிக்கப்படும் சிறப்பான அதிபராகவும் விளங்கியவர்.

சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின் தனது பணியை சமய, சமூக சேவைகளிலும் தொடர்ந்தார். பாண்டிருப்பு ஸ்ரீ சித்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் அரசடி அம்மன் ஆலய பரிபாலன சபையில் பல பதவிளை வகித்துள்ளதுடன் பாண்டிருப்பு-02B முதியோர் சங்கத்தின் தலைவராகவும், மேலும் கடந்த ஏழு வருடங்களுக்குமேலாக கல்முனை பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்கத்தின் செயலாளராக தொடர்ந்து மரணிக்கும் வரை சிறப்பான சேவையை செய்துள்ளார்.

எல்லோருடனும் அன்பாகவும் அவர்களின் கஸ்ட நிலைமைகளை அறிந்தும் எமது சங்க உறுப்பினர்களுக்கு நிறைவான சேவையை வழங்கியமை அனைவராலும் என்றும் மறக்க முடியாத எம்மால் என்றும் நினைவு கூரும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

மக்களுக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த அமரர். உயர்திரு. து.நடராசசிங்கம் ஐயா அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நானும் இணைந்து எனது துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

- ஓம் சாந்தி! -

**சாமசிறி தேசமான்ய A.செல்லத்துரை** J.P.
*ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமைத்துவ உதவியாளர்*
*பாண்டிருப்ப-02, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வின்றி உழைத்த உத்தமர்...

அமரத்துவமடைந்த துரோணாச்சாரி நடராசசிங்கம் அதிபர் அவர்கள், இயற்கையழகு பொருந்திய கிராமமாம் அன்னமலையை பிறப்பிடமாகவும், பாண்டவர்களின் இருப்பிடமாகவும் பாண்டிருப்பை வதிவிடமாகவும் கொண்டதோடு, தன்நலம் கருதாது பொதுநலத்திற்காக அர்ப்பணிப்போடு வாழ்ந்து விண்ணுலகத்தில் கால் பதித்து முப்பது நாட்கள் கடந்து விட்டாலும் அன்னார் ஆற்றிய பெரும் பணியின் ஒரு சிறு பகுதியாவது நினைவு கூர்வது இச்சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமென நினைக்கின்றேன்.

தானும், தன் குடும்பமும் என்று ஒரு சிறிய வட்டத்திற்குள் வாழாது, தன்னைப்போல் பிறரையும் நேசித்து, பிறருக்காக நல்ல திட்டங்களை வகுத்து, பொதுச்சேவை எனும் அரும்பெரும்பணியோடு தனது இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டினார்.

ஆசிரியர், அதிபர் என்ற சேவைகளோடு பொதுப்பணியிலும், ஆன்மீக பணியிலும், தன்னை இணைத்து ஓய்வின்றி உழைத்து, பலரது நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்ததோடு, குறிப்பாக எமது ஆலயங்களின் நிருவாக சபையிலும், பின்பு ஆலயங்களின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி இக்கிராமத்தின் ஆன்மீக வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார் என்பது மட்டுமல்ல பாண்டிருப்பு-02B பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பலகாலமாக செயலாளர், தலைவர் போன்ற பதவிகளை வகித்து இக்கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார். அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் உரையாற்றிய பல பெரியார்கள் அன்னாரின் சேவைகள் பற்றி விரிவாக எடுத்து இயம்பியதையும் நாம் கண்ணாறக் கண்டோம்.

அன்னார் இறுதி நாட்களில் எனது அயலவராக வாழ்ந்தபோது, அதிகாலை வேளைகளில் எழுந்து, வீட்டின் பின்பகுதியில் வீட்டுத்தோட்டம் செய்து தனது ஓய்வான பொழுதை எவ்வாறு பிரயோசனமான முறையில் கழித்து உழைத்தார் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக பல வழிகளிலும் ஓய்வின்றி உழைத்த ஒரு உத்தமரின் வாழ்க்கைப் பாடம் நாம் எல்லோருக்கும் நல்ல படிப்பினையாக அமைய வேண்டுமென்பதோடு, அன்னாரின் பிரிவால் கவலையுறும் மனைவி, மக்கள் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமானையும், எம் தாயாரையும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**சோ. சசேந்திரன்**
*தலைவர்*
ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீ அரசடி அம்பாள் மற்றும்,
ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானங்களின் பரிபாலன சபை,
பாண்டிருப்பு-02B, கிராம அபிவிருத்திச் சங்கம்
கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்கம்
முன்னாள் செயலாளர்
இலங்கை மனித உரிமை சங்க உறுப்பினர் (புலனாய்வு)
சர்வதேச லயன்ஸ் கழகங்களின் (306c2) மாவட்ட
ஆளுனரின் விசேட ஒருங்கிணைப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமு/ கணேசா மகா வித்தியாலயம் - சேனைக்குடியிருப்பு
முன்னாள் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் திவகலாலா அவர்கள்
நிகழ்வுப் பதிவேட்டில் கையெழுத்திட்ட போது...
அருகில் அமரர். து. நடராசசிங்கம் அதிபர்...



கமு/ கணேசா மகா வித்தியாலயம் - சேனைக்குடியிருப்பு
அன்றைய கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் திவகலாலா அவர்களை
வரவேற்று கௌரவித்து ஒன்றுகூடல் மண்டபம் திறப்பு விழா செய்த வேளை.. 1998இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய
நடராசசிங்கம் ஐயா பற்றிய

## நினைவுகள் ஒரு கணம்...

மட்டுமாநகரின் தெற்கே அன்னமலையில் அவதரித்த துரோணாச்சாரி நடராசசிங்கம் அவர்கள் வாழ்ந்து மடிந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற தடங்களை மீட்டிப் பார்ப்பது காலத்தின் தேவையல்லவா? கமு/ சது/நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் மட்டுமல்ல இப்பாடசாலையில் முதன்முதலில் ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கும் தோற்றி சித்தியடைந்த மாணவர்களில் இவரும் ஒருவர். படிக்கின்ற காலத்திலும் பாடசாலையில் நல் மாணவனாகத் திகழ்ந்து பாராட்டும் பெற்றவர்.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”**

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க உலகம் போற்றும் உத்தமனாய் தன்நலம் கருதாது "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என கருதி சமு/சது/நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் 1983ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை அதிபராக இருந்து சிறப்பான பணியாற்றினீர் ஐயா. ஆசிரியர் பற்றாக்குறையான காலகட்டத்திலும் தமது உறவுகளைக் கொண்டு கல்விப் பணியாற்றிய மேன்மையாளன் நீங்களல்லவா? உம் பணியால் ஊரே உவந்தெழுந்து ஞானம் பெற்றவர்கள் பலர். உமது சேவைக் காலத்தை நினைக்கும் போது உங்களது செயற்பாடுகள் எங்களுக்கு நிர்வாகத்தில் பல படிப்பினைகளைக் கற்றுத் தருகின்றது என்பதில் ஐயமில்லை.

உங்கள் நேரிய பார்வையும் திடகாத்திரமான உருவமும் உங்களைப் பார்க்கும் மாணவச் செல்வங்களுக்கு நல்ல ஒழுக்கத்தையும் சீரியமான வாழ்க்கையையும் கற்றுத் தந்தன. உங்கள் காலத்தில் உங்களது சிறந்த செயற்பாடுகளால் ஊரே உங்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றியது. அது உங்கள் வெற்றிக்கு சிறந்த சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையில் 1987ஆம் ஆண்டு மீண்டும் இவரது காலத்திலேயே க.பொ.த.(சா/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் 1990ஆம் ஆண்டே இப்பாடசாலை 1C யாகத் தரமுயர்த்தப்பட்டது. இவ் அதிபரின் காலத்திலேயே இப்பாடசாலை முன்மாதிரி பாடசாலையாகத் திகழ்ந்தது.

உங்களது காலத்தில் உங்களுடன் இணைந்து செயலாற்றி இன்று மண்ணில் தடம் பதித்துள்ளவரோ பலர். அவர்களில் சிவப்பிரகாசம், சிவபாதம், கோவிந்தராஜா சோமசுந்தரம் குணசேகரம் பிள்ளையான்தம்பி, சந்திரலிங்கம், நடராஜா, ராசமணி போன்றோரைக் குறிப்பிடலாம். உங்களுடன் இணைந்து பணியாற்றக் கூடிய வாய்ப்பெனக்கும் 1988ம் ஆண்டில் கிடைத்தது. அந்நாட்களை எண்ணிப் பார்க்கும் போது மறக்க முடியாதவைகளாக உள்ளன. எந்த வார்த்தை எனினும் அவை பொருள் மிகுந்தே வெளிவரும். எந்த விடயத்தையும் செய்யும் முன்பாக அதுபற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்ந்து சிறந்த முடிவுகளை எடுப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். அவரின் எந்தச் செயலிலும் தந்திரோபாயத் திட்டமிடல் இருந்தது. ஒரு கருமத்தில் துணிந்து இறங்கி விட்டால் முன்வைத்த காலை பின் வையாத வீரம் அவரிடம் இருந்தது. எதையும் நேரத்திற்கு செய்யும் குணம் அவரது ஆளுமைக் கூறின் எடுத்துக் காட்டாகும்.

உங்களுடன் இணைந்து நான் சேவையாற்றும் போது உங்களிடமிருந்து நான் நிர்வாகத்தில் கற்றுக் கொண்ட விடயங்கள் இன்று அதிபராக நான் செயற்படும் போது எனக்கு ஊன்றுகோலாக அவை இருக்கின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அன்னாரின் நினைவுத் தடங்களை மீட்டும் இவ்வேளை எல்லாம் வல்ல இறைவனிடம் நாங்கள் வேண்டுவது அன்னார் சொர்க்கத்தில் நிறைவான இன்பம் பெற்று வாழ்ந்திட வழி செய்திட வேண்டும் என்பதாகும்.

*புறச்சூழல் எம்மை துன்பத்திற்குள்ளாக்குவதாக புலம்புகின்றோம். உண்மையில் அது எமது தீர்மானம் மட்டுமே. அதிலிருந்து விடுபடக் கூடிய சக்தி எம்மிடம் உண்டு.*

*- மார்கஸ் அரேலியஸ் -*

அதிபர் - **நா. பிரபாகர்**
*கமு/சது/நாவிதன்வெளி அன்னமலை ம.வி.*
*நாவிதன்வெளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்பது பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவமாகும். அதற்கு ஏற்ப சீரும், சிறப்புடனும் வாழ்ந்து இறைவனோடு இரண்டறக் கலந்து விட்ட அமரர் து.நடராசசிங்கம் அதிபர் அவர்களின் சிறந்த பண்புகளையும் திறமைகளையும் இன்னோரன்ன பல நல்ல விடயங்களையும் எடுத்துக் கூறுவதற்கு இப்பத்திரம் போதாதென்றே நான் கருதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பாண்டிருப்பை வாழ்விடமாகவும் கொண்ட நான் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியை 1976இல் நிறைவு செய்து கொண்டேன். இதனையடுத்து கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் 1977ஆம் ஆண்டு முதல் உதவி ஆசிரியராக கடமையேற்று பணிபுரிந்தேன். அவ்வேளையில் இப்பாடசாலையில் அமரராகி விட்ட எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அமரர் து.நடராசசிங்கம் அவர்கள் உதவி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அன்றிலிருந்து ஆரம்பித்த எம் இருவருக்குமிடையிலான நல்லுறவுகள் அவர் அமரராகிய இறுதிவேளை வரை எதுவித களங்கமுமின்றி தொடர்ந்த வண்ணமே இருந்தன.

பாடசாலை, நிர்வாகம், முகாமைத்துவம் குறிப்பாக பாடசாலையின் தரவு - தகவல்களைச் சேகரித்து அவைகளை ஒழுங்கமைத்து நீண்ட காலத்துக்குத் தேவையான வரலாற்று ஆவணமாக பாதுகாத்து வைப்பதில் அவருக்கு நிகராக யாரும் இருக்க முடியாது என்பது எனது ஆணித்தரமான முடிவாகும்.

சாதாரண உதவி ஆசிரியராக பல வருடங்கள் அவருடன் இணைந்து பணியாற்றிய நான் தரம் பெற்ற அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்து கல்முனைப் பிரதேசத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணி செய்வதற்குப் பொருத்தமான அறிவையும், பயிற்சிகளையும் எனக்குக் கொடுத்து என்னை நெறிப்படுத்தியவர், வளம்படுத்தியவர் என்பது பொருத்தமானதே.

அவர்களுடன் அறிமுகமாகிய காலம் முதல் அமரராகி விட்ட இன்றைய காலம் வரை எனது "குருநாதர்" அவரேதான் என எச்சந்தர்ப்பத்திலும், எவர் முன்னிலையிலும் எடுத்துக்கூறி பெருமை கொள்வதில் நான் என்றும் தயங்கியதில்லை. என்னை மட்டுமல்ல அவருடன் இணைந்து பணியாற்றிய திரு.S.சோமசுந்தரம், திரு.கா.சந்திரலிங்கம், திரு.S.கோவிந்தராஜா போன்ற சிறந்த அதிபர்களை உருவாக்கிய "சிற்பி" என அமரர் து. நடராசசிங்கம் அதிபர் அவர்களை நாம் அனைவரும் நினைவு கூர்வதில் என்றும் தவறியதில்லை.

அமரர் அவர்கள் மிகக் கஷ்டப் பிரதேசமான அன்னமலைக் கிராமத்தை பிறப்பிடமாகவும் பாண்டிருப்பை வாழ்விடமாகவும் கொண்டவர். சது/நாவிதன்வெளி - அன்னமலை மகா வித்தியாலயத்தில் அமரர். து. நடராசசிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய வேளையில் மீண்டும் அவர்களுடன் 1983 ஆம் ஆண்டிலிருந்து 1989வரை சுமார் ஆறு வருடங்கள் உதவி ஆசிரியராக அவரோடு இணைந்து நான் பணியாற்றினேன். அவ்வேளையில் அப்பாடசாலையில் தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையே வகுப்புக்கள் இருந்தன. படிப்படியாக வகுப்புக்களின் தரத்தையும், மாணவர்களின் தொகைகளையும், ஆசிரியர்களின் தொகைகளையும், தொடர்ந்து அதிகரிக்கச் செய்து தரம்-11 வகுப்பு வரை உயர்த்திய பெருமை அவரையே சாரும்.

பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் வெற்றிகள் அனைத்தும் மேலும் மேலும் அதிகரிக்க இரவு - பகல் பாராது அயராது உழைத்த உத்தமன், உழைப்பாளி என்று கூறுவது மிகையாகாது. அமரர். து.நடராசசிங்கம் அவர்கள் இப்பாடசாலையில் அதிபராகவிருந்து சேவையாற்றிய காலத்தில் ஏறக்குறைய பத்திற்கும் மேற்பட்ட தொண்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களை இணைத்து அவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டதுடன் அவர்கள் அத்தனை பேரையும் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் பெற்றுக்கொடுத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிசமைத்து நிகரற்ற வழிகாட்டியாக விளங்கியவர்.

அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் கல்முனை ஓய்வூதியர் சங்கத்தை ஆரம்பிக்க முன்னோடியாக இருந்ததுடன் பல வருடங்கள் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து பிரதிபலன் கருதாது அரும்பணியாற்றியவர். பல ஓய்வூதியர்களின் துன்பங்களையும், துயரங்களையும், இடர்களையும் நீக்கி ஆறுதல் அளித்து அவர்கள் அனைவரையும் அன்பினால் அரவணைத்து அவர்களது மகிழ்ச்சியில் இன்பம் கண்ட பெருந்தகை.

பல ஆலயங்களில் முக்கிய பதவிகளை வகித்து ஆலயங்களின் வளர்ச்சிக்கும், ஆன்மீகச் செயற்பாடுகளுக்கும் உறுதுணைாக இருந்து செயற்பட்டதுடன் பொது நலன்கருதி சமூக சேவைகள் பல செய்த "சமூக ஜோதி" யாக விளங்கியவர்.

பாண்டிருப்பை வாழ்விடமாகக் கொண்டு நல்ல மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தன்னகத்தே கொண்டு சிறந்த "குடும்பத் தலைவனாக" திகழ்ந்தவர்.

இன்னும் பல வருடங்கள் வாழ்ந்து உயர்ந்த குடிமகனாக வலம் வர வேண்டிய அமரர். து. நடராசசிங்கம் அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் நோய்வாய்ப்பட்டு யாரும் எதிர்பாராத நேரத்தில் இயற்கை மரணத்தைத் தழுவி இறைவனடி சேர்ந்து விட்டாலும் அவர் இவ் உலகில் வகித்த வகிபாகத்தை எவராலும் நிரப்ப முடியாது என்பதே உண்மை.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவைத் தாங்காது துன்புறும் அவரது குடும்பத்தாருக்கு எனது அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**P. சிவப்பிரகாசம்**
*ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்*
*நெசவு நிலைய வீதி,*
*பாண்டிருப்பு-01, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் திட்டமிடலுக்கு முன்மாதிரி

## அதிபர் து.நடராசசிங்கம் அவர்கள்

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு**

ஒரு செயலைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளையும், ஏற்ற காலத்தையும் செய்யும் வகைகளையும், செயலின் அருமையையும் நன்கு சிந்திப்பவனே நல்ல அமைச்சன், என்பதையே திருவள்ளுவர் மேற்சொன்ன குறளில் வலியுறுத்திய விடயம், இந்த விடயத்துக்கு அமரர்.து.நடராசசிங்கம் அவர்கள் மிகவும் பொருத்தமானவர். சேனைக்குடியிருப்பு கணேச மகாவித்தியாலயத்தில் அவர் அதிபராக இருந்த காலத்தில் ஏழு வருடங்கள் நான் ஆசிரியராக இருந்தேன். எனது ஆசிரியர் தொழில் ஆரம்ப காலம், எனக்கு கிடைத்த அதிபர் நான் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன். எனது கடமையேற்றல் கடிதத்தை தன் கையாலே தட்டச்சு செய்து என்னை ஒப்பம் வைக்கச் சொன்னார். அன்றிலிருந்து ஆரம்பித்த பந்தம் இன்னும் அவ்வாறே உள்ளது. அவரிடமிருந்து கற்றுக்கொண்ட விடயங்கள் ஏராளம், கடமை நேரங்கள் ஒரு நிருவாகி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அதிபர் நடராசசிங்கம் அவர்களே முன்மாதிரி. அவரது சேவைக்காலம் முழுவதும் ஒரே மாதிரியாகத்தான் செயற்பட்டார். கடமையைச் செய்யும் போது குறுக்கிட்டு பொறுப்பற் விதத்தில் செயற்படும் வீணர்களை இவர் சர்ச்சிதமாக கை நழுவி விடுவார்.

தனது தொழில் சம்பந்தப்பட்ட விடயமானாலும், பொது விடயமாக இருந்தாலும் தனது குடும்ப விடயமாக இருந்தாலும் திட்டமிட்டு செயற்படுவது இவரது பிறவிக்குணம் என்றே கூறவேண்டும். முன் திட்டமிடலை மிகவும் திறம்பட செய்வார். திட்டமிட்டவாறே செய்து முடிப்பார்.

பாடசாலை விழாக்கள் விளையாட்டுப்போட்டி, சுற்றுலா சிரமதானம் என்பன வெவ்வேறாக ஆசிரியர்களிடம் பொறுப்புகள் வழங்கப்படும். அதை எவ்வாறு நிறைவேற்றுவது. அதில் உள்ள பலம், பலவீனம் அதாவது வாய்ப்புக்களைப் பயன்படுத்துவது சவால்களை வெற்றி கொள்வது என்ற திட்டம் அதிபர் து.நடராசசிங்கம் அவர்களுடைய குறிப்புப் புத்தகத்தில் (Hand Book) குறிக்கப்பட்டிருக்கும். அதுதான் அவருடைய பலமாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடமிருந்த நிருவாகத் திறமைக்கு நீதியாக சிந்திக்கும் சமூகத்தில் ஒரு 1AB பாடசாலை பொறுப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவற்றை பெறுவதற்கு பல பின்னணிகள் காரணமாக அமைய வேண்டும். அரசியல், மதம், உயர்பதவிகளில் இருப்பவர்களை வால் பிடித்தல், ஏனையவர்களுக்கு குழிபறித்தல் இவ்வாறான கீழ்தரமான செயற்பாடுகள் நடராசசிங்கம் அதிபரிடம் இல்லாத காரணத்தால் கிடைத்த சந்தர்ப்பத்தையே சிரமேத கொண்டு தனது பணியை சிறப்பாக செய்து நல்ல நிலையைத் தக்க வைத்துக் கொண்டார்.

இவர் தனது ஓய்வு காலத்திலும் காலத்தை வீணடிக்கவில்லை, இவரது திறமையை தேடி பல பொறுப்புகள் இவரை வந்து சேர்ந்ததால் அதையும் சளைக்காமல் செய்தார். பகிரங்க ஓய்வூதிய சங்கத்தின் பொதுச் செயலாளராக இறக்கும் போதும் பதவி வகித்தார்.

அதிபர் நடராசசிங்கம் அவர்களின் இழப்பு உண்மையிலே சமூகத்தில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது. சொல்வதை செயலில் காட்டுபவர்கள் சமூகத்தில் சிலரே உள்ளதாலதான் சில இழப்புக்கள் ஈடு செய்ய முடியாமல் போகிறது. அன்னாரின் பிரிவால் துயரமடையும் அவரது குடும்பத்திற்கு எனது ஆறுதல் மொழிகள் உரித்தாகட்டும். அன்னாரின் ஆன்மா இறைவனோடு ஐக்கியமாகட்டும் என பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு

**மா. லக்கிணம்**

*(ஆசிரிய ஆலோசகர்)*

*பாண்டிருப்பு-01, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மனதில் பதிந்த
## அதிபர் உயர்திரு. து. நடராசசிங்கம் அவர்கள்

தன்னெழில் கொஞ்சும் அன்னமலை
பெற்றெடுத்த தவப் புதல்வன்
நடராசசிங்கம் எனும் பெரியோன்
தன்னிகரில்லா தலைவன் அவ்வூரில்
கல்வியில் சிறந்து விளங்கி
அடைந்திட்டான் புலமைப்பரிசில்
பரீட்சையில் வெற்றி
கற்றான் கல்வி காத்தான்குடியில்
பெற்ற பெறுபேறு நன்றாய் அமைய
வந்தாறுமூலையும் வருந்தி அழைத்தது!
ஆசிரியர் தொழிலும் அருமையாய் கிடைத்தது.

தொழிலின் மகத்துவம் உணர்ந்த வள்ளல்
கடமையை தானும் சிறப்பாய் செய்ய
அதிபர் பதவியும் தானாய்க் கிடைத்தது!
காரியம் ஆயிரம் ஆயிரம் செய்தார்.
நாவிதன்வெளி அன்னமலை வித்தியாலயம்
ஏழாம் வகுப்பை தன்னுள் கொண்டது
மேலும் வகுப்பை உயர்த்த எண்ணி
எடுத்தார் முயற்சி பலவாறாக
தடைகள் பலவும் வந்த போதிலும்
வருடம் தோறும் வளர்ந்தது வகுப்பு

உயர்தர வகுப்பும் ஒழுங்காய் அமைந்தது
பல்கலைக்கழகம் சென்றனர் மாணவர்
சேனைக்குடியிருப்பிலும் சேவையாற்றினார்
ஓய்வு பெற்று வீடும் சென்றார்
ஆற்றிய சேவைக்கு அங்கொரு இல்லம்
நடராசசிங்கமென நாமமும் பெற்றது.

ஓய்வூதியர் சங்கம் இணைத்தது உன்னை
ஆற்றினார் சேவை சிறப்புற அங்கே
செயலாளர் பதவியும் கிடைத்தது பரிசாய்
நற்பல காரியம் நலமே செய்தாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம் செய்தது போதும் என்று
எண்ணிய இறைவன் தன்னிடம் எடுக்க
காலனை உன்னிடம் அனுப்பி வைக்க
அவனும் தேரினில் அழைத்துச் சென்றான்

அணைந்தது விடிவெள்ளி
விழுந்தது பேரிடி
இழந்தது பெருஞ்சொத்து
தவித்தது உள் இதயம்
ஏற்க முடியாதேங்குகிறேன்
மீண்டும் வருவாயா?
எண்ணிப் பார்க்கின்றேன்!

அன்பின் திருவுருவம் அகத்தில் வஞ்சமில்லை
புன்முறுவல் முகம் புதுமாப்பிள்ளை போலிருப்பாய்
கழுத்துப் பட்டியுடன் கடமையில் நீ இருக்கும்
கண்கவர் காட்சி மணித்திரையை விட்டு
மாறவில்லை ஐயா!

கண்கள் கனத்திருக்க
கவலைகள் பெருகிவர
நெஞ்சம் வெடித்தது போல்
மனம் தினங்கள் புரண்டு அழ
பழகிய காலங்கள் பசுமரத்தாணியாக
நினைவுகள் தொடர்ந்து வர மறக்க முடியவில்லை ஐயா!

மானுட வாழ்க்கை சிறிது காலம்
இறப்பு என்பது நிச்சயம் தான்
ஆற்றிய சேவைகள் அழிவதில்லை
காலம் முழுவதும் நிலைத்து நிற்கும்
உன்புகழும் அப்படியே தான்!

இழப்பை தாங்க முடியாது தவித்து நிற்கும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

**கா. சந்திரலிங்கம்**
*ஓய்வுநிலை அதிபர்*
*சேனைக்குடியிருப்பு-01, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாருக்கு கல்முனை Y.M.C.A.ஸ்தாபனத்தின் நினைந்துரை

**"ஒருவருக்கு ஒருவராய் பணி செய்யுங்கள் ஒருவரில் ஒருவர் அன்பு பாராட்டுங்கள்"**
கற்றாய்ந்து சேவை புரிந்து இளைப்பாறிய பின் அரச சேவைதனில் இளைப்பாறி ஓய்வூதியம் பெறுவோருக்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பில் கல்முனை பிராந்தியத்தில் கௌரவ செயலாளராக இருந்து பல சிரமங்கள் கஸ்ட சூழ்நிலைகளில், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் என்ற பாகுபாடுகளின்றி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்று பண்புகளையும் மாறாது கடைப்பிடித்து கடமையாற்றி வந்த அமரர்.து.நடராசசிங்கம் ஐயா அவர்களது அமரத்துவச் செய்தி எங்களையும் ஆழ்ந்த கவலைக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாகியது. அன்னார் கல்முனைப் பிராந்திய ஓய்வூதியர்கள் மத்தியில் கடமை ஆற்றிய காலத்தில் எமது Y.M.C.A.ஸ்தாபனத்துடன் கொண்டிருந்த தொடர்பு அபரிமிதமானது குறுகிய காலப்பகுதியில் எமக்கான பழக்கம் ஏற்பட்டாலும் மிகவும் நீண்ட நாட்கள் அனுபவம் போன்றதான தோற்றம் அமைந்திருந்ததை மறுக்க முடியாது.

அவர் எம்முடன் பழகிய காலங்களின் போது பலவித பாடங்களை கற்றுக் கொண்டோம் என்பது குறிப்பிடத்தக்கது. உரிய நேரத்தில் தவறாது கடமைக்கு வருகை தரல், தன்னுடன் இணைந்துள்ள அனைவரையும் பேதமின்றி புரிந்து செயற்படல், தேவைகளுக்கு ஏற்ப பாகுபாடற்ற செயற்பாடுகளை உடனுக்குடன் பூர்த்தி செய்தல், நல்ஆலோசனை கூறுதல், பிறரை நோவடிக்காது புரிந்து வாழுதல் என்பவற்றை அன்னாரிடம் சுட்டிக் காட்டலாம்.

அன்னாரிடம் காணப்பட்ட இனப்பற்று, சமூகப்பற்று, தேசப்பற்று என்பன என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவையும், இதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த பண்புகளாகும். எதனையும் மனம் திறந்து பேசி சமூக நிலையை உருவாக்கிய சிறப்புக் கண்டு நாம் பலதடவை வியப்புற்றிருக்கின்றோம். அன்னாரது வாழ்வில் பண்புகளில் கவரப்பட்ட நாங்கள் கல்முனை Y.M.C.A. கட்டிடத்தில் ஓய்வூதிய அங்கத்தினருக்கான ஒரு சங்க காரியாலய இடத்தினை கொடுத்து உதவியமை அவருடன் இருந்த நட்புரிமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவரது பண்புகள் எமது வாழ்விலும் எதிரொலிக்கச் செய்வதே அமரருக்கு நாம் செய்யும் பிரதியுபகாரமாக எண்ணுகிறோம்.

நல்ல ஆசான் வழிகாட்டி, சமூகவியலாளர், சிந்தனையாளர், இவரது இழப்பு தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ சமயத்தினருக்கும் எமக்கும் ஈடு செய்ய முடியாததொன்றாகும். இவ்வேளை துயரமுற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர் அனைவருக்கும் எமது Y.M.C.A. சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஐயாவின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

*"எம் கடன் பணி செய்து கிடப்பதே"*


இப்படிக்கு
**J. B. வத்தோலமியூஸ**
*பொதுச்செயலாளர் Y.M.C.A. கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் இளமைத் தோற்றங்கள்



38 வயதினில்...



தனது 24 வயது இளமைப்பருவம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்







## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதர் விதாத் துன்விரை
யார் கழற் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும்
கைதான்நெகிழ விடேன்உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்து
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமை
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூய் மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறிசேராமே
வில்லாண்ட கனகத்திரள்மேரு விடங்கன்விடைப் பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலேவந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலானந்த அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற்குவித்து
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமதான சற்குண நேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


**திருச்சிற்றம்பலம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| | | |
|---|---|---|
| மலர்வு | | உதிர்வு |
| 1943 | | 2015 |
| 11 | | 04 |
| 19 | | 25 |



*அன்னமலையை பிறப்பிடமாகவும் பாண்டிருப்பு 2B ஐ வசிப்பிடமாகவும் கொண்ட*

## துரோணாசாரி நடராசசிங்கம் (ஓய்வு பெற்ற அதிபரும்)

கல்முனை ஓய்வூதிய நிதியச் செயலாளரும், பாண்டிருப்பு - 02B முதியோர்சங்கத்தலைவரும்

***அவர்கள் 2015.04.25 அன்று சிவபதம் எய்தினார்.***

அன்னார் காலஞ்சென்ற துரோணாசாரி தங்கப்பிள்ளை தம்பதியினரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், இரத்தினேஸ்வரியின் மூத்த மருமகனும் தனலட்சுமியின் பாசமிகு கணவரும், குமுதா, விஜயா, குமணன், முகுந்தன், கிரிதரன், கிரிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன், தர்மராஜா, கோகிலாதேவி, மகேஸ்வரி, அனுசியா, சிறிகந்த பாலன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான மரகதவல்லி, செல்வரெத்தினம், நேசமணி மற்றும் முத்துரெத்தினம், பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, தாமோதரம், சாமித்தம்பி, இளையதம்பி, சின்னத்துரை மற்றும் யோகின்ராணி, புவனேஸ்வரி, தங்கேஸ்வரி காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கனேஸ்வரன், நாகேந்திரன், கமலேஸ்வரி ஆகியோரின் அத்தானும் காலஞ்சென்ற தாமோதரம் மற்றும் பொன்னுத்துரை, எதிர்மனசிங்கம், ஜெயதேவி, கௌரி, தேவரஞ்சன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், அமுதா, கவிதா, நவினன், மேனுஜன், கிஷோமி, ஆகியோரின் பெரியப்பாவும், ரந்திப், பிரவித், கோபிகா, யதுசிகா ஆகியோரின் மாமனாரும், வருணிகா, சிவாஞ்சனி, சதுர்சிதுஷன், அட்சரன், பிரந்தியட்சனி, குகேஸ், துரனிகா, தனுஷாகர், தக்ஷவர்தனி, மயூரா, மஹிரதா, தனுஷியன், யாதுகன், தக்ஷி, விகாஸ் ஆகியோரின் அன்புமிகு பாட்டனாரும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக்கிரியை 30.04.2015ஆம் திகதி 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பாண்டிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.*

480/1, கந்தப்பர் வீதி, பாண்டிருப்பு - 02B,
கல்முனை, 067 2220613

தகவல்
அன்னாரது குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமலையைப் பிறப்பிடமாகவும் பாண்டிருப்பு-02ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திரு. துரோணாச்சாரி நடராசசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் மறைவை முன்னிட்டு

## நேத்திரம் தோய்ந்த நீர்த்துளிகளில்
## எம் இதய சோக காணிக்கை...



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1943 - 11 - 19 | 2015 - 04 - 25 |

ஏ! மானிடமே!
ஏழு வகைப் பிறப்பிலும் எடுப்பானது உன் பிறப்பு
தாயின் கருவறையில் தரித்து விளையாடி
குத்துக்கரணமிட்டு குவலயத்தே வந்தனையோ
மண்ணுலகு உன்னை வரவேற்கிறது.
ஆண் மகவு என்றால்
அன்னைக்கு அதீத சந்தோசம்
அவள் அணைக்கின்றாள் உன்னை
கொஞ்சி குலாவி கூடி விளையாடி
பிஞ்சப்பருவம் கடந்து பெருமகனாய்
மஞ்சம் நிறைந்த வாழ்க்கை மனமார நடாத்துகின்றாய்
ஆசை உணர்வுகள் அங்கலாய்ப்புக்கள்
மோச எண்ணங்கள் முளைக்காமல் போவதில்லை
இறப்பு என்பது நிச்சயமென்பதை
எண்ணிப்பார்க்கின்றாயா?
எத்தனையோ கோலங்கள் இம்மண்ணில்
அர்த்தமற்ற முடிவுகளை அரவணைக்கின்றாயே.
மண் சிரிக்கின்றது வாய்த்த இரை கிடைத்ததென்று
இது நிலையான உலகு - என்றும்
நிலைக்காத வாழ்வு
வேதம் சொல்லும் நீதி
இதை விளங்கவில்லையா? நீ
நினைத்துப்பார்.

ஐயா! நீங்கள் கல்விக்கோர் ஆசான்
கடமையிலும் நல்லதிபர்
ஓய்வு பெற்ற வேளையிலும்
ஓயாத மாமனிதர் - ஏன்
ஆலயங்கள் தொட்டு அபிவிருத்திச் சங்கங்கள்
ஓய்வூதியர் சங்கம், மூத்த பிரஜைகள் சங்கம்
முக்கிய உறுப்பினராய் முன்னின்று செய்தீர்கள்
நினைக்க முடியவில்லை.
நீங்கள் - நீங்கிய செய்தி கேட்டு
நெஞ்சுருகிப் போனோமே
பாசமுள்ள மனைவி பண்புள்ள நன்மக்கள்
நேசமுள்ள சுற்றத்தார்
மக்கள் மருமக்கள் மற்றுமெல்லா உறவுகளும்
உதிர்த்த கண்ணீரால் ஓரக்கன்னங்கள்
நனைக்கின்றன.
இதயங்கள் கனத்தலினால் எத்தனையோ
நட்புறவுகள் ஏங்கித் தேம்புகின்றன.
சித்திர குப்தனின் சிறுகணக்கும் சரியாச்சு
சித்திரைத் திங்களிலே சென்றீரோ நற்கதிக்கு
பூதவுடல் அழியும்
புகழுடம்பு நிலைத்திருக்கும்
மறுமைப் பயனை வானுயர நீங்கள் பெற
மனமார நெஞ்சுருகி வேண்டி
நேத்திரம் தோய்ந்த நீரால்
நாம் நின்பாதம் அஞ்சலிக்கின்றோம்.


SLR உத்தியோகஸ்தர்கள்
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்....

## அமரர் துரோணச்சாரி நடராசசிங்கம்

அவர்களுக்கு கல்முனைப் பிரதேச ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம்
காணிக்கையாக்கும் கண்ணீர் பூக்கள்



அன்னமலை என்னும் அழகான ஊரில்
துரோணச்சாரி அண்ணலும் தங்கப்பிள்ளை அன்னையும்
இணைந்து கலந்து பெற்ற முத்து
நடராசசிங்கம் என்னும் நல்லோன் - நீ!



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1943 | 2015 |
| 11 | 04 |
| 19 | 25 |

பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்து
புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்து
காத்தான் குடியில் கல்வியைத் தொடர்ந்து
வந்தாறு மூலையில் நிறைவு செய்தாய்!

ஆசிரியர் தொழிலில் மிளிர்ந்த உன்னை
அதிபர் பதவியில் அமர்த்தினர் மக்கள்
ஆற்றிய பணியால் பாடசாலை உயர
உயர்தர வகுப்பும் உதயமாக
பல்கலைக் கழக வாய்ப்பும் கிடைக்க
மாணவர் அனைவரும் மகிழ்ந்து நின்றனர்!

வயதும் வந்தது ஓய்வும் பெற்றாய்
ஓய்வூதியர் நிதியம் அழைத்தது உன்னை
செயலாளர் பதவியும் தேடி வந்தது
ஓயாமல் பணியும் ஆற்றினாய் ஆயிரம்...

ஆற்றிய பணிக்கு எடுத்துக் காட்டாய்
மீண்டும் மீண்டும் செயலாளர் பதவி
எழுச்சி பெற்று எழுந்தது சங்கம்
தசாப்த நிகழ்வும் சிறப்பாக நடந்தது
ஆச்சரியத்துடன் அனைவரும் நோக்கினர்
வந்தவர் வாழ்த்தி வாயாரப் புகழ்ந்தனர்!

இன்றும் இருப்பாய் இனியும் செய்வாய்
என்று நினைத்தோம் ஏமாற்றம் அடைந்தோம்
காலன் அழைப்பு கடிதென வந்தது
கலங்கி நின்று துடிக்கிறோம் நாங்கள்!

சோகத்தில் திளைத்திருக்கும் குடும்பத்தினருக்கு
ஆறுதல் கூறி ஆன்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கல்முனைப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம்
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமலையைப் பிறப்பிடமாகவும் பாண்டிருப்பு-02ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திரு. துரோணாச்சாரி நடராசசிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்கட்கு எமது

# விழிநீர் அஞ்சலி...



பிறப்பு:
1943 - 11 - 19

இறப்பு:
2015 - 04 - 25

அன்புள்ள நன் மனிதனே...
நல் அறிவைச் சொரியும் ஆதவனே...
எங்களை விட்டு நீங்கள் பிரியவில்லை
எங்கள் ஸ்தாபனத்தில் ஒரு முன்னோடியாகவும், ஆலோசகராகவும்,
கைதேர்ந்த காசாளராகவும் கடமைபுரிந்து விட்டுச் சென்ற
பயிற்சிநெறிகளும், பழகும் முறைகளும்
எங்கள் கண் காண்கின்றோம்
இன்றும் தங்களின் சிறந்த தலைமைத்துவத்தின் தாக்கத்தை
தற்போதும் உணர்கின்றோம்.

மண்ணில் உங்கள் உருவம் மறையலாம்,
எங்கள் மனதில் உங்கள் மனவுருவம் என்றும் மடியாது.
உங்கள் பெயர் மட்டும் நடராஜசிங்கம் அல்ல
உரிமைகளை தட்டிக்கேட்டு வெல்வதிலும் ஒரு சிங்கமும் கூட
உங்கள் புன்முறுவலில் புலப்படும் மகிழ்வை இனி எங்கு காண்போம்
உங்கள் உயிரையும் உணர்வையும் பறித்துக்கொண்ட
அந்த கடவுளைத்தான் பழிக்க முடியும் எங்கள் கண்ணீரால்.

அமரத்துவம் என்பது ஒரு அந்தமல்ல
அது ஒரு அகல்விளக்கே...

*தங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.*

---

என்றும் உங்கள் துயரில்

**சொர்ணம் நகையகம் உரிமையாளரும், ஊழியர்களும்**

கல்முனை - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப கட்டமைப்பு

காலஞ்சென்றவர்களான
துரோணாச்சாரி தங்கப்பிள்ளை

காலஞ்சென்ற இரத்தினசிங்கம்
இரத்தினேஸ்வரி

காலஞ்சென்ற மரகதவல்லி, முத்துரெத்தினம்,
காலஞ்சென்ற செல்வரெட்ணம்,
காலஞ்சென்ற நேசமணி
காலஞ்சென்ற **நடராசசிங்கம்**, பாக்கியலெட்சுமி

**தனலெட்சுமி** பேரின்பராணி, புவனேஸ்வரி
தங்கேஸ்வரி, காலஞ்சென்ற கந்தசாமி, கணேஸ்வரன்,
நாகேந்திரன், கமலலேஸ்வரி

குமுதா
தாஸ்கரன்
→ வருணிகா
சிவாஞ்ஜனி
சதுர்நிதூஷன்

விஜயா
தர்மராஜா
→ அட்சரன்
பிரத்தியட்சன்

குமணன்
கோகிலாதேவி

முகுந்தன்
மகேஸ்வரி
→ குகேஸ்
தரணிகா
நிதூறா

கிரிதரன்
அனுசியா
→ தனுஷாகர்
தக்ஷவர்த்தினி

கிரிஜா
சிறிகாந்பாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்...

எம் குலவிளக்காம, கோமகன் துரோணாச்சாரி நடராசசிங்கம் ஐயா இறையடி எய்திய செய்தி கேட்டு அல்லலுற்றது அலறியடித்து இல்லம் விரைந்து ஆறுதல் செய்திகளை அள்ளித்தந்த நல் உள்ளங்களே! வானுயர்ந்த மாமகனின் மறைவைக் கேட்டு காலடிக்கு ஓடிவந்து வாய் ஓய ஓலமிட்டு துக்கம் பகிர்ந்த உற்றாரே! உறவினரே! தோழமை கொள் அன்பினரே! சோதரரே! அனைத்து உறவுகளே! ஆற்றொணாத துயரத்தை அணைத்து நின்ற ஆசிரியப் பெரியோரே! மாணாக்கர் பெருங்குழாமே! சிறார்கூட்டமே! அன்னாரிடம் பரிச்சயமிக்க பேராளர்களே! ஓய்வூதிய பயன்பெறும் பெரியோரே! தலைமைகொள் தயவாளர்களே! மற்றும முதியோர் சங்க ஏற்பாட்டாளர்களே! எம்மனை வந்து மனமுவந்து பணிகள் செய்த அனுதாபிகளே! கண்ணீராய் அஞ்சலித்துப் பதாதைகளை பறக்க விட்ட நிறுவனரே! பெருமகரே! கூடாரம், கொடி கட்டி கூடவே நின்றுழைத்த நண்பர்களே! இருக்கைகள் பல தந்து உதவிட்ட செம்மனகாள்! பல இரவு சேர்ந்து கண்விழித்து கவலைகளை கலைத்திட்ட கண்மணிகாள்! ஓடி வந்து துயர் கலைக்க முடியாமல், தபால் மூலம், தொலைபேசி மூலம், தொலைநகல் மூலம், மின்னஞ்சல் மூலம், தொண்டர் மூலம் துயர் செய்தி தந்த அரியோரே! கானொலி மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் கருத்தறிந்து துயர் பகிர்ந்த கடல் கடந்த கனிவான கண்மணிகாள்! உறவுகளே! பகல் இரவு விழித்திருந்து துயர் கொண்ட வேளையிலே, தேநீரால் உற்சாகம் உவந்தளித்த உள்ளங்களே! பல காறும் பசித்திருந்த வேளையிலே புசிப்பதற்கு காலை, பகலுணவும், இரவுணவும், பகிர்ந்தளித்த பெரியோரே! உங்கள் உதவிகளால் உள்ளங்கள் நெகிழ்ந்ததன்றோ! அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தினர், ஊழியர்கள், தனியார் துறை அதிபர்கள், ஊழியர்காள்! அஞ்சலித்து பிரசுரங்கள் அளித்திட்ட அனைத்து துறை அனுதாபிகளே!

இரங்கலுரை மேற்கொண்டு அன்னாரின் சிறப்புதனை எடுத்தியம்பி வெளிக்கொணர்ந்த அனைத்துப் பேராளர்களே! பெரியோரே! அன்னாரின் இறுதிப்பயணத்திலும் கலந்து கொண்டு அஞ்சலித்த அனைத்துச் சொந்தங்களே! பேராளர்களே! அனைவருக்கும் அடியேன் நான் என் உறவுகள், சுற்றம் சார்பில் பல கோடி நன்றிகளை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

*- நன்றி -*

*இங்ஙனம் அன்னாரின் பிரிவுத்துயரில் வாடி நிற்கும் அன்பு மகன்*


**ந. முகுந்தன்**

*பாண்டிருப்பு-02, கல்முனை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –

கோல்டன் அச்சகம், கல்முனை. 067-2223939

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org